# மக்கள் பாதிக்காதவாறு மின் நெருக்கடிக்கு தீர்வு

**ஜனாதிபதி பணிப்பு**



02 பக்கம்

Follow us:

தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 425 பிலவ வருடம், மார்கழி மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (11.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகிர் - 07, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

# இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்பு

**வழங்க முன்வந்த 3 நாடுகள்**

தென்கொரியா, ஜப்பான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் இலங்கைக்காக வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை வழங்க முன்வந்துள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட...

02 பக்கம்

# தேர்தலை நடத்தினால் புதிய அரசியல் கூட்டணி!

## மைத்ரி நேற்று மீண்டும் அதிரடி



*(யோ.தர்மராஜ்)*

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு நாங்கள் கடும் எதிர்ப்பு. எங்களுக்கு தேர்தல் வேண்டும். தேர்தல் நடத்தப்பட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை முன்னிலைப்படுத்தி கூட்டணியின் புதிய ஆட்சியை அமைப்போம் என சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று (10) புதிய ஊடக மையமொன்றை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு நாங்கள் கடும் எதிர்ப்பு. எங்களுக்கு தேர்தல் வேண்டும். அதற்காகவே நாங்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றோம். எங்களுடைய காலத்தில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கும் தற்போதைய தேர்தல் ஒத்திவைப்புக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

முன்னாள் பிரதமர் நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பு முரண்பாட்டை தோற்றுவித்திருந்தார். ஆனால், எனக்கு நாடாளுமன்றத்திற்கான அதிகாரம் இருக்கவில்லை.

02 பக்கம்

# பதவிகளை இராஜினாமா செய்யுமாறு பணிப்புரை

**நெடுஞ்சாலைகள் அமைச்சு அதிகாரிகளிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் கோரிக்கை**




தனது அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களை பதவி விலகுமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, அமைச்சின் கீழ் இயங்கும் மகநெகும மற்றும் இயந்திரக் கம்பனி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மகநெகும ஆலோசனை நிறுவனம், அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் தலைவர்கள் எதிர்வரும் காலங்களில் பதவி விலகவுள்ளதாக தெரியவருகிறது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாட்டு பிரஜை தப்பியோட்டம்

**விரட்டிச்சென்று கைதுசெய்த பாதுகாப்புத்தரப்பு**



போலி கடவுச்சீட்டில் அபுதாபி ஊடாக பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகருக்கு செல்ல முற்பட்ட வெளிநாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார், குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அபுதாபியில் இருந்து...

02 பக்கம்

# யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கு பகுதியிலேயே உள்ளது

**எந்த நாட்டினதும் தென்பகுதியில் இல்லையென்கிறார் சீனத் தூதுவர்**



யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம் மற்றும் யாழ்ப்பாண தீவுகளில் மின்சக்தி திட்டம் குறித்தும் கருத்து வெளியிட்டுள்ள சீனத் தூதுவர் கீ சென்ஹோங் கொவிட் நிலவரம் காரணமாகவே யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம் தாமதமானது என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கில் இருக்கின்றது-எந்த நாட்டிற்கும் தெற்கில் இல்லை என சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் இலங்கைக்கான சீனத்தூதுவர் மேலும் கூறியதாவது,

02 பக்கம்

# கொழும்பில் ஒரே நாளில் மூன்று சடலங்கள் மீட்பு

கொழும்பில் நேற்று ஒரே நாளில் 3 அடையாளம் தெரியாத சடலங்கள் மீட்கப்பட்டன. கொலன்னாவைப் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றிலிருந்து நேற்று (10) பிற்பகல்...

02 பக்கம்

# மக்களின் வாக்குகளை பெறுவதற்கா ஈஸ்ரர் தின தாக்குதல் நடத்தப்பட்டது?


**பேராயர் மெல்கம் கேள்வி**



மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஈஸ்ரர் தினத்தில் தாக்குதல்கள் நடத்த அனுமதிக்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். ஈஸ்ரர் தின குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளின் தற்போதைய நிலை குறித்து.

02 பக்கம்

## உஷ்



*அரசாங்கத்திலிருந்து வெளியேற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்தாலும், அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் அரசிலிருந்து வெளியேறாதிருக்க தீர்மானித்துள்ளனராம்.*

*நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர உட்பட்ட சிலரே தொடர்ந்து அரசில் இருக்க தீர்மானித்துள்ளதாக தகவல்.*

# வழக்கு விசாரணையை இடைநிறுத்தும் சம்பிக்கவின் கோரிக்கை நிராகரிப்பு

இராஜகிரிய விபத்து தொடர்பான வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு, பாட்டலி சம்பிக்க ரணவக்க முன்வைத்த கோரிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு இராஜகிரிய பகுதியில் வாகன விபத்து ஒன்றை ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வருடம் செப்டெம்பர் 29 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியை கைதுசெய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

அதேநேரம் குறித்த சம்பவம்...

02 பக்கம்

# மார்ச் மாதத்திற்குள் சீனாவிலிருந்து உரம்



02 பக்கம்

# மருந்துக்கும் தட்டுப்பாடு வரலாம்; புதிய எச்சரிக்கை வெளியானது



டொலர் நெருக்கடி காரணமாக கடன் கடிதங்கள் வழங்க முடியாமையால் சுமார் 80 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக அரச மருத்துவ தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



**மெழுகுதிரி , சிம்னி இலாம்பு, பெட்ரோமெக்ஸ் எண்டு பழைய நினைவுகளை மீட்டித்தருது கவர்ன்மெண்ட்.. அப்படியே இளையராஜா பாட்டுகளையும் போட்டா சோக்கா இருக்கும்...**

# நோய் அறிகுறி இருந்தால் பாடசாலை அனுப்பாதீர்!

**பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பெற்றோர்களிடம் கோரிக்கை**

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் சுகாதாரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் சமூகத்திற்கு வெளிப்படும்போது கொவிட் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதால் சரியான சுகாதார...

02 பக்கம்

# அதிகமாகவே விநியோகிக்கிறோம்; அதிகம் வாங்கிச் சேமிக்காதீர்கள்

**லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவிப்பு**




அன்றாட தேவைக்கு அதிகமாக எரிவாயுவை விநியோகம் செய்து வருவதாகவும் உள்நாட்டு மற்றும் வர்த்தக சந்தை தேவைகளுக்கு ஏற்ற எரிவாயு கையிருப்பு உள்ளதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று (10) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிறுவனம் கடந்த இரண்டு நாட்களில் 220,000 உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வழங்கியுள்ளது. அத்துடன், ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 90 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் சிலிண்டர்களை வழங்க அனைத்து...

02 பக்கம்

# 13 ஆம் திகதி பதவி விலகும் பி.பீ!



ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர எதிர்வரும் 13 ஆம் திகதி பதவி விலகவுள்ளார்.

தனது அலுவலக பணியாளர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பு ஒன்றின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய செயலர் காமினி செனரத் 19 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.



காலிமுகத்திடல் கரையோரத்தில் முதலை ஒன்று நீண்ட நேரம் உலாவியமை அந்த பகுதியில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
படப்பிடிப்பு:சமன் அபேசிறிவர்தன

# மூன்று புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் திணைக்களம் அங்கீகாரம்

தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த மூன்று கட்சிகளை அங்கீகரித்து அரசியல் கட்சியாக பதியும் நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் கட்சியாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய லங்கா சுதந்திரக் கட்சி என்ற கட்சியும் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யுகதனவி மனுக்கள் மீதான விசாரணை ஒத்திவைப்பு

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று (10) மூன்றாவது நாளாக உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பி தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்களுக்கு ஆதரவாக பிரமாணப் பத்திரம் தாக்கல்செய்த அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உதித இகலஹேவா சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

குறித்த மூன்று அமைச்சர்களும் சமர்ப்பித்த பிரமாணப் பத்திரங்கள் அரசியலமைப்புக்கு முரணானது என சட்டமா அதிபர் அண்மையில் உயர் நீதிமன்றத்தில் எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தார்.

வண.எல்லே குணவன்ச தேரர் மற்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, வசந்த சமரசிங்க, தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட தரப்பினரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்களின் பிரதிவாதிகளாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை உறுப்பினர்கள், யுகதனவி பவர் பிளாண்ட் வெஸ்ட் கோஸ்ட் பவர் பிரைவேட் லிமிடெட், அமெரிக்க நிறுவனமான நிவ் போட்ரெஸ் எனர்ஜி, சட்டமா அதிபர் உள்ளிட்ட குழு பெயரிடப்பட்டுள்ளது.

# சஹ்ரானின் மனைவிக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 24 வரை ஒத்திவைப்பு




(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல்செய்த குற்றப்பத்திரிகை சிங்கள மொழியில் காணப்பட்டமையினால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 திகதிக்கு வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளது.

குறித்த குற்றப்பத்திரிகையினை சட்ட மா அதிபர் சஞ்சய ராஜரத்னத்தின் கையெழுத்துடன் அவர் சார்பாக அரச சட்டவாதியினால் கல்முனை மேல் நீதிமன்றில் நேற்று (10) தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய குற்றப் பகிர்வுப் பத்திரமானது கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட நிலையில் குற்றப்பத்திரமானது சிங்கள மொழியில் காணப்பட்டமையினால் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சந்தேகநபர் தமிழ் பேசும் ஒருவராக இருப்பதனால் குற்றப்பத்திரத்தில் உள்ள சகல விடயங்களையும் தமிழ் மொழியில் மாற்றி வழங்கவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு குறித்த வழக்கினை ஆராய்ந்த நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸினால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதன்போது சஹ்ரானின் மனைவியான பிரதிவாதி பாத்திமா ஹாதியா மன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். அவர் நீதிமன்றத்திற்கு கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அழைத்து வரப்பட்டிருந்தார்.

## அதிகமாகவே....

நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

கூடுதல் எரிவாயு சிலிண்டர்களை சேமிக்க முயல்வதாலேயே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், நுகர்வோர் தினசரி தேவைகளுக்கு மட்டுமே நியாயமான விலையில் எரிவாயுவை வாங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

# சக்குராய் விமான சேவையின் அதிகாரிகள் இருவர் கைது

சக்குராய் விமான சேவையின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை பொறியியலாளர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றவியல் பிரிவினரால் இவர்கள் நேற்று (10) கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலகுரக விமானம் ஒன்று திடீரென கட்டுநாயக்க கிம்புலாபிட்டிய பிரதேசத்தில் தரையிறக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஏற்பட்ட விபத்தில் இரண்டு விமானிகள் மற்றும் வெளிநாட்டு பயணிகள் இருவர் காயமடைந்திருந்தனர்.

இந்த விபத்தை தொடர்ந்து சக்குராய் விமான சேவையின் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருந்துக்கும்....

இந்த ஆண்டுக்கான (2022) வருடாந்த மருந்து மதிப்பீடுகளுக்கு ஏற்ப மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான கடன் கடிதங்கள் வழங்கப்படாததால் சுமார் 80 வகையான மருந்துகளை கொள்வனவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முறையான டெண்டர் நடைமுறைகளுக்கு பின்னர் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஓகஸ்ட் மாதம் முதல் கடன் கடிதம் வழங்கப்படும், மருந்துகளை இறக்குமதி செய்ய நான்கு மாதங்கள் ஆகும். ஜனவரி மாதமளவில் நாட்டுக்குள் மருந்துகள் கொண்டுவரப்படும். எனினும், இந்த வருடத்துக்கான கடன் கடிதங்கள் இதுவரை வழங்கப்படாத நிலையில், குறித்த மருந்துகளை நாட்டுக்கு கொண்டுவருவதில் நான்கு மாதங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் பாதிக்காதவாறு

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் மின்சார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

மின்வெட்டு விவகாரம் தொடர்பில் மின்சாரம் மற்றும் எரிசக்தி துறைகளின் தலைவர்களுடன் நேற்று (10) முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

நிலக்கரி மற்றும் புதைபடிவ எரிபொருளை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மார்ச் மாதத்திற்குள்

சீனாவில் இருந்து புதிய சேதன உரத்தினை ஏற்றிய முதலாவது கப்பல் பெப்ரவரி இறுதி அல்லது மார்ச் முதல் வாரத்தில் இலங்கைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிக்கைகளின்படி, ஆய்வக சோதனைகளின் அனுமதியின் பின்னர் மொத்தம் 8,000 மெட்ரிக் தொன் உரம் நாட்டை வந்தடைய உள்ளது.

இலங்கை சம்பந்தப்பட்ட சீன நிறுவனத்திடம் இருந்து மொத்தமாக 96,000 மெட்ரிக் தொன் உரங்களை கொள்வனவு செய்துள்ளதுடன், இந்த இருப்புக்களை இலங்கைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உர இருப்புக்கள் எதிர்வரும் பயிர்ச்செய்கை காலத்திற்கு பயன்படுத்தப்படும் என கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் ஒரே நாளில்.

அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

அதேசமயம் கொழும்பு வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டிக்கு இடைப்பட்ட கடற்கரையிலிருந்து நேற்றுக் காலை இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்த சடலங்களும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இவ்வாறு நேற்று மீட்கப்பட்ட 3 சடலங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்கலாம்
அழையுங்கள்
0761393805

## தேர்தலை

எனக்கு ஆளும் கட்சியும் இருக்கவில்லை. எதிர்க்கட்சியும் இருக்கவில்லை. எனவே, நாடாளுமன்றத்தில் சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சித்து அவர்களே தேர்தலை ஒத்திவைத்தனர்.

எதிர்வரும் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியே அமையும். எங்களுடைய ஆட்சியை நிச்சயம் அமைப்போம். கட்சிப் பேதமின்றி நாட்டுக்கான தேசிய திட்டத்தை முன்வைப்போம். அதனை ஏற்றுக்கொண்டு எங்களோடு, இணைந்து கொள்பவர்களோடு ஆட்சி அமைப்போம்.

பழைய கூட்டணி காலாவதியாகியுள்ளதால் புதிய கூட்டணி ஒன்றையே அமைப்போம். இதுவரை எந்தவொரு கட்சியுடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பேச்சுவார்த்தை நடத்துவதாக வெளிவரும் கருத்துக்கள் அனைத்தும் போலியானது என்பதுடன், எங்களுக்கு எதிரான விமர்சனங்களாகும் - என்றார்.

## இலங்கையர்களுக்கு.

முகவர் நிலையங்கள் மூலம் இந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை பணியகத்தின் www.slpf.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் 0112879900 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வழக்கு விசாரணையை.

தொடர்பாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அவரின் சாரதி மற்றும் வெலிக்கடை காவற்துறையின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு வெளிநாடு செல்வதற்கு தடையைக் கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. இதனையடுத்து இராஜகிரிய விபத்து தொடர்பான வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு, பாட்டலி சம்பிக்க ரணவக்க நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் வாக்குகளை.

ஐரோப்பாவில் வாழும் இலங்கையர்களுடன் சூம் வழியாக நடந்த கலந்துரையாடலில் பேராயர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது, அரசியல்வாதிகள் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை அழித்துவிட்டனர். இந்த அமைப்பில் யாரையும் பாதுகாப்பாகவோ நியாயமானவர்களாகவோ கருதமுடியாது. சஹ்ரானை கைதுசெய்வதற்கான பிடியாணையை வைத்திருந்தபோதே பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா கைதுசெய்யப்பட்டார்.

முஸ்லிம் தீவிரவாதிகள் இதைத் தயார் செய்தது உண்மைதான். ஆனால், தெரிந்தே தகவல்களை மறைத்து மக்களின் வாக்குகளைப் பெறவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் இந்த தாக்குதலுக்கு 60 வீத பொறுப்பு. இங்கு ஆட்சியில் இருப்பவர்கள் இதை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர். இந்த நபர்கள் விசாரணையிலிருந்து தகவல்களைப் பெற விரும்பவில்லை" என்றார்.

## கட்டுநாயக்க விமான

பாரிஸ் நகருக்குச் செல்லும் விமானத்தில் செல்வதற்காக அதிகாலை 2.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

விமான பயணச்சீட்டை பெற்றுக் கொண்ட குறித்த சந்தேகநபர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் சமர்ப்பித்த சீஷெல்ஸ் தேசிய கடவுச்சீட்டு தொடர்பில் அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேகநபர் எல்லை கண்காணிப்பு பிரிவின் தொழில்நுட்ப ரீதியிலான பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் அங்கிருந்து தப்பிச்சென்று கூரையின் மீதேறி ஒளிந்துகொள்ள முயன்றுள்ளார்.



இதையடுத்து பாதுகாப்பு படையினர் மேற்கூரையில் அந்த நபர் பதுங்கியிருந்த இடத்துக்குச் சென்று கெமராக்களில் கண்காணித்து அவரைக் கைதுசெய்தனர்.

அவர் கழுத்தில் தெளிவாகத் தெரியும் இலக்கத்தை பச்சை குத்தியுள்ளார். மேலும் அவர் வெளிநாட்டு சிறையிலிருந்து தப்பியிருக்கலாம் அல்லது பயங்கரவாதக் குழுவின் உறுப்பினராக இருக்கலாம் என்று பாதுகாப்புத்துறை தகவல்கள் கூறின.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

## யாழ்ப்பாணம்

மூன்று தசாப்தகால யுத்தம் வெற்றிகரமாக முடித்துவைக்கப்பட்ட பின்னர் வடபகுதிக்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்து சீனா ஆர்வமாக உள்ளது.

இலங்கையின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்கு ஆதரவளிக்காமல் பல நாடுகள் பின்வாங்கியபோது சீனா இலங்கைக்கு அவசியமான ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கியது.

சீனாவிற்கு இரகசிய நிகழ்ச்சி நிரல் இல்லை. வடபகுதி மின்திட்டங்களை இரத்துச்செய்வதால் இலங்கைக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்படாலம். வடக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் முன்னெடுக்கப்படும் திட்டத்தை சீனாவின் தனியார் துறையினர் கேள்விப்பத்திர முறை மூலம் பெற்றுக்கொண்டனர். அதற்கும் சீன தூதுரகத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றை செய்ய விரும்புகிறோம். இலங்கையின் தற்போதைய சூழ்நிலையை சீனா எந்த தருணத்திலும் தனக்கு சாதகமாக பயன்படுத்தாது.

இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கை இந்த கடினமான சவால்களை வெற்றிகொள்ளும். இலங்கை கடந்த காலங்களில் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டது. தற்போதைய நிலைவரம் தற்காலிகமானது.

இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை சில நாடுகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளன. இலங்கை தாமதமின்றி இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதை உறுதிசெய்யவேண்டும். கொவிட் நிலைவரம் காரணமாகவே யாழ்ப்பாணத்திற்கான எனது விஜயம் தாமதமானது. யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கில் இருக்கின்றது-எந்த நாட்டினதும் தெற்கில் இல்லை.

## நோய் அறிகுறி....

வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது,

தங்கள் பிள்ளைகளுக்கு கொவிட் தொற்று அறிகுறிகள் தென்பட்டாலோ, அல்லது வீட்டில் எவருக்காவது தொற்று அறிகுறிகள் இருந்தாலோ, தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் இருக்க பெற்றோர் நடவடிக்கை எடுக்கவேண்டும். பாடசாலை நேரங்களில் ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்கு நாம் அறிவித்துள்ளோம்.

எனவே, நாட்டின் இன்றைய சூழ்நிலையில் பாடசாலை மாணவர்களை பாடசாலையில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களும் பெற்றோர்களும் முழுப்பொறுப்புடன் செயற்பட வேண்டும். எனவே, பொறுப்புடன் செயற்பட்டால், பாடசாலைகளை தொடர்ந்து நடத்தமுடியும், என்றார்.

# இன்றைய ராசி பலன்

11.01.2022 செவ்வாய்க்கிழமை மார்கழி 27

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: பரணி** காலை 11.10 - 12.1.2022 பிற்பகல் 2.00 வரை
**யோகம்: சாத்யம்** காலை 10.56 - 12.1.2022 காலை 11.38 வரை
**திதி: பூர்வ பட்ச நவமி** பிற்பகல் 2.21 வரை
**பூர்வ பட்ச தசமி** பி.ப.2.21 - 12.1.2022 பி.ப. 4.49 வரை
**முற்கரணம்:கௌலவம்** அ.கா 1.18 - பி.ப 2.21
**பிற்கரணம்: தைதுலம்** பி.ப. 2.21 - 12.1.2022 அதிகாலை 3.32 வரை

**சுப நேரங்கள்**
காலை 10.51 - 12.18
**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
மாலை 3.15 - 4.43
**குளிகை காலம்**
பிற்பகல் 12.19 - 1.47
**எமகண்ட காலம்**
காலை 9.22 - 10.50
**துர் முகூர்த்தம்**
காலை 8.47 - 9.34
இரவு 11.05 - 11.54

**லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** சில சிந்தனைகள் மனதில் நிறைந்திருக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். இன்று இறையருளால் நல்ல சாதகமான நாளாக அமையலாம். பணிகளும் சிறப்பாக நிறைவேறும்.

**ரிஷபம்:** இன்று அதிர்ஷ்ட கால நிலை இல்லாததால் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் பிரச்சினைகளை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற விடயங்களில் செலவுகள் ஏற்படலாம். வாழ்க்கைத்துணை உங்கள் உணர்வுகளை மதித்து ஆதரவாக இருக்கும் நிலை உண்டாகலாம். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**மிதுனம்:** இறக்குமதி/ ஏற்றுமதி வர்த்தகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கலாம். பெண்களுக்கு ஆபரணம் அல்லது ஆடைகளுக்கான செலவு உண்டாகலாம். காதலர்களுக்கு திருமண திட்டம் உருவாகலாம். பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம்.

**கடகம்:** வீட்டின் சூழ்நிலையில் நல்ல நிலை தோன்றலாம். அலுவலகத்தில் உயர் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கலாம். பணியிடத்தில் உங்கள் சுய தேவைகளுக்கான கடனும் கிடைக்கலாம். சக ஊழியர்களுடன் மகிழ்வான நிலையும் உண்டாகலாம்.

**சிம்மம்:** தொழில் சம்பந்தப்பட்ட பயணம் ஏற்படலாம். காதலர்களுக்கு உறவுகள் வலுப்படலாம். அன்றாட வழக்கங்கள் ஒழுங்குபெறும். திறமைகளை சிறப்பாக பயன்படுத்தி சில நல்ல செயல்களில் வெற்றியும் உண்டாகலாம்.

**கன்னி:** வாழ்க்கைத்துணையுடன் கோபத்தை தவிர்ப்பது நன்மை. அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகள் தடைப்படலாம். வீட்டில் சில விலை உயர்ந்த பொருட்கள் சேதமடையாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். உங்கள் குறைகளை நீக்க முயற்சி நல்லது. இறைதியானம் நன்மை. சந்திராஷ்டமம்: அத்தம் நட்சத்திரத்திற்கு அ.கா 4.31 - 12.01.2022 காலை 7.15 வரை

**துலாம்:** நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும். வணிகத்தில் பெரிய ஒப்பந்தம் கிடைக்கலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். புதிய தொழில் துவங்கலாம். வருவாய்க்கான நல்ல நிலை உருவாகலாம்.

**விருச்சிகம்:** வணிக விரிவாக்க கடன் பெறுவதற்கு இன்று சாதகமான நாள். பணியில் ஓய்வற்ற நிலை இருந்தாலும் குடும்பத்திற்கும் நேரம் ஒதுக்குவது நல்லது. உங்கள் எண்ணங்களை மிக நெருங்கியவர்களிடம் மட்டும் பகிர்தல் நல்லது.

**தனுசு:** பணிகளில் மேலதிகாரிகளின் ஆதரவு மேம்படும். சக பணியாளர்களுடன் உறவை பேணுவது நல்லது. சிலருக்கு மறை அறிவியல் (பிரபஞ்சம் மற்றும் அமானுஷ்யம்) கற்கைகளின் ஆய்வு ஆர்வம் உண்டாகலாம். சிலருக்கு காதலில் நேரங்கள் இன்று இனிமை தரலாம்.

**மகரம்:** மாணவர்களுக்கு தங்கள் கல்வியில் உற்சாகம் மேம்படும். வாழ்க்கை முறை மற்றும் ஆடம்பரச் செலவுகள் ஏற்படலாம். வணிகத்தில் புதிய முயற்சிகளை இன்று தவிர்ப்பது நல்லது. உணவகங்கள் சம்பந்தப்பட்ட தொழிலுக்கு இன்றைய நாள் சாதகமாக இல்லை.

**கும்பம்:** ஊடகத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிகளில் இருந்த பிரச்சினைகள் நீங்க துவங்கும். ஆக்கபூர்வ எண்ணங்கள் மேலோங்கலாம். பணி நேர்முகத் தேர்வுகள் நல்ல பயன் தரலாம். நிதி நிலை மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** அறிவுபூர்வமான நட்பு அதிகரிக்கலாம். நீங்கள் விரும்பாதவர்களின் சந்திப்பும் ஏற்படலாம். பரம்பரை சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கலாம். சிறு தொழில் துவங்க சாதகமான நாளாக அமையலாம். பணிகள் தாமதமின்றி நிறைவேறும்.

# கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கு சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம்

## பிரதமர் மஹிந்த இராஜபக்ஷ பெருமிதம்





சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் இன்று தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது - என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடத்தின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் புதிய நுழைவாயில் வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (10) கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்ததையும், தொழில்நுட்பப் பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையையும் குறிக்கும் வகையில் பிரதமர் விசேட குறிப்பொன்றை விடுத்ததுடன், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸினால் பிரதமருக்கு நினைவுச்சின்னமொன்று வழங்கப்பட்டது.

அங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது அரசாங்கங்கள் எப்போதும் கல்வி குறித்து விசேட கவனம் செலுத்தி வருகின்றன. உயர்கல்வி, பல்கலைக்கழக அமைப்பு மற்றும் பாடசாலைகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் உழைத்தோம். அதனால்தான் கொத்தலாவல பாதுகாப்பு விஞ்ஞானபீடத்தை பல்கலைக்கழகமாக மாற்ற நடவடிக்கை எடுத்தோம். நான் ஜனாதிபதியாக இருந்தபோது இவ்விடயத்தில் விசேட கவனம் செலுத்தினேன்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இரண்டு முறை கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்துள்ளேன். 2007ஆம் ஆண்டு கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியை கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக மாற்றும் நிகழ்வில் கலந்துகொண்டேன். 2014ஆம் ஆண்டு வேரஹேர சுகாதார அறிவியல் பீடத்தின் திறப்பு விழாவிலும் கலந்துகொண்டேன்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடத்தின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நிகழ்விலும் பிரதான நுழைவாயில் வளாகத்தின் திறப்பு விழாவிலும் இன்று நான் மூன்றாவது தடவையாக வருகை தந்துள்ளேன்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டமை மிக முக்கியமான மைல்கல் என்பதை கூறவேண்டும். ஒவ்வொரு வருடமும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பிற்காக இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை அதன் வெற்றிக்கு சான்றாகும். வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால், பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுநோய்க்கு முன்னர், ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்கள் உயர்கல்விக்காக வருடாந்தம் வெளிநாடுகளுக்குச் சென்றனர். அதனூடாக ஏறத்தாழ நூற்றுக்கணக்கான மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நியச் செலாவணியை நாடு இழக்க வேண்டியுள்ளது. இது தேசிய அளவில் மிகவும் கடுமையான நிதி நெருக்கடிக்கு வழிவகுக்கிறது.

உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல எதிர்பார்த்திருந்த பெருமளவிலான மாணவர்களைத் தக்கவைத்ததன் ஊடாக பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மில்லியன் கணக்கான டொலர் அந்நியச் செலாவணியை நாட்டுக்கு சேமித்துத் தந்துள்ளதென நம்புகிறோம்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்பட்டு நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளை வழங்கி அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவை பிரதமர் என்ற ரீதியில் நான் பாராட்டுகிறேன். 2022ஆம் ஆண்டு முதல் புதிய இரண்டு பீடங்களை எதிர்கால நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப்பட உள்ளமையை நான் கூற விரும்புகிறேன்.

அரச பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெறாத திறமையான மாணவர்களுக்கு பட்டப் படிப்புகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம், உங்களது பல்கலைக்கழகம் நாட்டுக்கு பெரும் சேவையை ஆற்றிவருகின்றது.

இலங்கையை தெற்காசிய வலய கல்வி மையமாக மாற்றுவதே எமது அரசாங்கங்களின் கொள்கை. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் முக்கிய வாக்குறுதிகளில் ஒன்று, பல்கலைக்கழக கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவதும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குவது மாகும். அதன்படி, கடந்த ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கையை அதிகரித்தோம்.

தேசிய நலன்களை அறிந்துகொண்ட ஒரு பல்கலைக்கழகம் என்ற வகையில், நமது எதிர்கால சந்ததியினருக்கு வழங்கப்படும் பட்டப்படிப்பு திட்டங்களின் பாடத்திட்டத்தை தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப ரீதியாக அடையாளம் காணப்பட்ட புதிய போக்குகளுக்கேற்ப சரியான நேரத்தில் புதுப்பிப்பதும் முக்கியம்.

பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பிள்ளைகளின் சிறந்த திறன்களை வளர்க்க கடினமாகவும் விடாமுயற்சியுடனும் செயற்பட்டுவருவதை நாங்கள் அறிவோம். இன்று பிள்ளைகளுக்கு தகவல் தொழில்நுட்பத் திறன் மற்றும் ஆங்கிலத் தொடர்பாடல் திறன் இருக்கவேண்டும். பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பட்டப்படிப்புகளிலும் இதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதே இதற்குச் சிறந்த சான்றாகும்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்த மனிதாபிமான நடவடிக்கையின்போதும், போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் காயமடைந்தவர்களைக் கவனிப்பதற்கு ஆயுதப்படைகளுக்கு மேலதிக மருத்துவர்கள் தேவைப்பட்டனர். அதற்கு இந்த பல்கலைக்கழகம் பங்களிப்பு செய்தது. மருத்துவ பீடத்தை நிறுவியதன் மூலம், அனைத்து ஆயுதப் படைக்கும் மருத்துவ நிபுணர் குழுவொன்றை உருவாக்கும் தேசிய பொறுப்பை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் முழுமையாக நிறைவேற்றியுள்ளது என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தியை கட்டியெழுப்புவதற்கு அதற்கு தகுதியான பலர் அவசியம். புதிய தொழிநுட்பப் பீடம் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் அபிவிருத்திச் செயற்பாட்டிற்குத் தேவையான திறமையான நிபுணர்களை உருவாக்க கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு முடிந்ததென நம்புகிறோம். முப்படையினரின் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதிலும் நாட்டின் பிள்ளைகளுக்கு ஒழுக்கமான சூழலில் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதிலும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் ஆற்றிவரும் சிறந்த சேவை பாராட்டப்படவேண்டியதாகும்.

இந்த நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒவ் த எயார் ஃபோஸ் ரொஷான் குணதிலக்க, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகேதென்ன, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# டிக்கோயா நகரசபையில் நிலையான செயலாளர் இல்லாததால் பெரும் நெருக்கடி

## நாளாந்த - அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்னடைவு; சபைத் தலைவர் குற்றச்சாட்டு





(மனுர சுதத் செல்லஹேவா)

டிக்கோயா நகரசபையில் 09 மாத காலம் நிலையான செயலாளர் ஒருவர் இல்லாததால் அந்தச் சபையின் நாளாந்த நடவடிக்கைகளைபோன்று அந்த பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் சடையன் பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் டிக்கோயா நகரசபையின் தலைவர் சடையன் பாலசந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் குற்றச்சாட்டு காரணமாக ஹட்டன், டிக்கோயா நகரசபையின் செயலாளராக கடமையாற்றிய சரவணபவன் சேவையிலிருந்து நீக்கப்பட்டதையடுத்து அந்தச் சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது.

ஒன்பது மாதங்களுக்கு முன்னர் முன்னாள் செயலாளர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதனையடுத்து அந்தச் சபையின தற்காலிக செயலாளராக தலவாக்கலை, லிந்தலை நகர சபையின் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் கடந்த இரு வாரங்களாக இந்தச் சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் இறந்த நகர சபையின் நிலையான செயலாளர் ஒருவர் இல்லாமல் 09 மாதங்கள் நகரசபையின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்நிலைமையில் நிலையான செயலாளர் இல்லாமல் சபையின் நாளாந்த நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் டிக்கோயா நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வேலைத்திட்டங்களை முறையாக முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் நிலையான செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியிருந்ததாகவும், இதுவரையில் இந்த நகரசபைக்கு நிலையான செயலாளர் ஒருரவரை நியமிக்க அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் மாயம்

(அநுராதபுரம் நிருபர் )

மல்வத்து ஓயா ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த 17 வயது இளைஞரொருவர் நீரில் மூழ்கி காணமல் போயுள்ளதாக தந்திரிமலை பொலிஸார் தெரிவித்தனர்.

தந்திரிமலை போகொட பகுதியிலுள்ள மல்வத்து ஓயா பாலத்துக்கு அருகில் நீராடிக் கொண்டிருக்கும்போது நேற்று முன்தினம் மாலை இவர் காணாமல் போயுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

லுனுவில, வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளதுடன், சிறுவனின் சடலத்தைத் தேடும் நடவடிக்கைகளை தந்திரிமலை பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியான தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் சடலம் இதுவரையில் அகப்படவில்லையென பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

மடு தேவாலயத்திற்கு யாத்திரை சென்று மீண்டும் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வழியில் மல்வத்து ஓயா ஆற்றில் நீராடிக்கொண்டிருக்கும்போதே குறித்த இளைஞர் இவ்வாறு காணாமல் போயுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தந்திரிமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனாவிடமிருந்து 127 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள்



சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவ உபகரணங்களின் பெறுமதி சுமார் 127 மில்லியன் ரூபாவாகும்.

இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கமைய இந்த மருத்துவ உபகரணங்களை உடனடியாக வழங்க சீன அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மருத்துவ உபகரணங்களை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வெளிவிவகார அமைச்சில் நேற்று (10) இடம்பெற்றது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென்ஹோங், இந்த வைத்திய உபகரணங்களை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார்.

# கோட்டாபய அரசு கவிழ்வது உறுதியான விடயம் : அது எப்போது என்று இப்போது கூறமுடியாது !

## அமைச்சர் விமல் தெரிவிப்பு



"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

அரசு தற்போது எதிர்நோக்கும் அரசியல் நெருக்கடி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இராஜாங்க அமைச்சர்களையோ அல்லது அமைச்சர்களையோ பதவி நீக்கம் செய்வதால் அல்லது அமைச்சுகளின் பொறுப்புகளை கைமாற்றம் செய்வதால் அரசின் நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ள இன்றைய நிலைமையில் மக்களின் மனதை வெல்லும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே பங்காளிகளான எமது நோக்கம். இதற்காகவே நாம் உள்ளுக்குள் இருந்துகொண்டு பாடுபடுகின்றோம். வெளியாட்களுடன் சேர்ந்து அரசை வீழ்த்துவது எமது நோக்கமல்ல.

எனினும், அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது. அரசின் நகர்வுகளைப் பொறுத்தே அதன் முடிவு தங்கியிருக்கும்.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து - ஆழமாக ஆலோசித்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள சிறந்த தீர்மானங்களை எடுக்கவேண்டும்" - என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 11ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தடுப்பூசியை தவிர்க்காதீர்!

சீனாவின் வூஹான் நகரத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு பரவத் தொடங்கிய கொவிட்-19 என்ற கொரோனா வைரஸ், உலகில் பல நாடுகளிலும் பரவியது. இதனால் உலகம் முழுவதும் இலட்சக்கணக்கில் மக்கள் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து 2021இல் கொவிட்டின் இரண்டாவது அலை ஏற்பட்டது. அதில் கொவிட்-19, டெல்ட்டா என்று உருமாற்றமடைந்தது.

இதனால் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மிகவும் பாதிப்படைந்தன. தற்போது 2022இல் கொவிட் வைரஸின் மூன்றாவது அலையில் ஓமிக்ரோன் என்ற புதிய வகை வைரஸ் பரவி வருகிறது. இதன் பரவல் டெல்ட்டா வகை கொவிட்டை விட வேகமாக இருந்தாலும் இதுவரை பாதிப்பு குறைந்தளவே உள்ளது.

இந்நிலையில், சைப்ரஸ் நாட்டில் டெல்ட்டாக்ரோன் என்ற புதிய வகை உருமாற்றமடைந்த கொவிட்டைக் கண்டுபிடித்துள்ளனர். இது டெல்ட்டா மரபு பின்னணியையும், ஓமிக்ரோன் வகை கொவிட்டின் குணங்களையும் கொண்டுள்ளதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இருப்பினும், இதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வாளர்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். டெல்ட்டாக்ரோன் வைரஸ் காரணமாக சைப்ரஸ் நாட்டில் இதுவரை 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் அதிவேகமாகப் பரவிக்கொண்டிருக்கும் கொவிட்-19 நோய்த்தொற்றின் இந்த உருமாற்றம் ஏற்படுத்தும் அச்சுறுத்தல் அதிர்ச்சியளிக்கிறது. ஆழிப்பேரலையாக மீண்டும் ஒருமுறை கொவிட்-19 தாக்கக்கூடும் என்கிற உலக சுகாதார ஸ்தாபனத்தின் எச்சரிக்கையைப் புறந்தள்ளிவிட முடியாது.

உலகின் பல நகரங்களில் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டிருப்பதால் அத்தியாவசியப் பொருட்கள் கூட இல்லாமல் பொதுமக்கள் அவதிப்படுகிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இதுவரை இல்லாத அளவிலான பாதிப்புகள் பதிவாகி இருக்கின்றன. ஒருபுறம் ஓமிக்ரோன் உருமாற்றம் பரவுகிறது என்றால், இன்னொருபுறம் ஏறத்தாழ 40 வீத அளவில் டெல்ட்டா உருமாற்ற பாதிப்பும் காணப்படுகிறது.

பிரிட்டன், துருக்கி, கிரீஸ், ஜேர்மனி, பிரான்ஸ், சுவீடன், பின்லாந்து, அவுஸ்திரேலியா என வைரஸ் தொற்றின் பரவல் எல்லைகளும் கண்டங்களும் கடந்து காட்டுத்தீ போன்று பரவிக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் டெல்ட்டா உருமாற்றம் ஏற்படுத்திய, நிலைகுலைய வைத்த பாதிப்புகளின் பின்னணியில் இப்போதைய ஓமிக்ரோன் உருமாற்றப் பரவலை நாம் கவனக்குறைவாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

சர்வதேச அளவில் அதிவிரைவாகப் பரவிக்கொண்டிருக்கும் ஓமிக்ரோன் உருமாற்றத்தை எதிர்கொள்வதற்கு உடனடியாக எதிர்ப்புச் சக்தியை உறுதிப்படுத்தும் மூன்றாவது தவணை (பூஸ்டர் டோஸ்) போடப்படுவது அவசியமென்று மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களையும் ஓமிக்ரோன் உருமாற்றம் பாதிக்கிறது என்றாலும்கூட, பாதிப்பு கடுமையாக இல்லை என்று கூறப்படுகிறது. அதனால் பூஸ்டர் டோஸ் எனப்படும் மூன்றாவது தவணை தடுப்பூசி அத்தியாவசியமாகிறது.

முன்களப் பணியாளர்களும், நோய் உள்ளவர்களும், மூத்த குடிமக்களும் இரண்டாவது தவணை தடுப்பூசியும் போட்டுக்கொண்டு ஆறுமுதல் 10 மாதங்கள் கழிந்துவிட்ட நிலையில், அவர்களது கொவிட்-19க்கான எதிர்ப்புச் சக்தி குறைந்திருக்கும். அதனால் உடனடியாக மூன்றாவது தவணை தடுப்பூசி போட்டுக்கொள்ளவேண்டியது கட்டாயமாகிறது. நாட்டில் காலதாமதமில்லாமல் மூன்றாவது தவணை தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியிருப்பது வரவேற்புக்குரியது.

கொரோனா தடுப்பூசிகள் குறித்து தொடர்ச்சியாக வெளியிடப்படும் தவறான தகவல்களை மக்கள் நம்பிவிடக்கூடாது. அனைத்து தடுப்பூசிகளிலும் நேர்மறையான விளைவுகளுடன் பக்கவிளைவுகளும் ஏற்படுவது வழக்கம்தான். கொரோனா தடுப்பூசி மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. சிறிய அளவிலான பக்க விளைவுகள் ஏற்படும். தடுப்பூசி செலுத்திய பிறகு இரண்டு வகையான பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. தடுப்பூசி செலுத்தியவருக்கு, செலுத்தியவுடன் வலி ஏற்படுகிறது அல்லது செலுத்திய இடம் சிவந்திருப்பதும், வீக்கமாக இருப்பதும் முதல் வகையில் (localized) நடைபெறும். இது அடுத்த 48 மணிநேரத்தில் சரியாகிவிடும்.

இரண்டாவது வகையில் (Systemic) நோய் எதிர்ப்புச் சக்தி, தடுப்பூசி மருந்துடன் சண்டையிடுகிறது. இதனால், காய்ச்சல், நெருடலான உணர்வு மற்றும் மந்தநிலை ஏற்படும். இது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க செல்களுக்கு உதவுகிறது. மறுபுறம் எந்த பக்கவிளைவுகளும் இல்லையென்றால் கொரோனா தடுப்பூசி சக்திவாய்ந்ததில்லை என்றும் அர்த்தம் கிடையாது.

மிகவும் குறைவாகவே அனபிலாக்ஸிஸ் (anaphylaxis) என்னும் நிகழ்வு நடைபெறுகிறது. அதில், கடுமையான ஒவ்வாமை, குமட்டல், வாந்தி, தோல் அரிப்பு உள்ளிட்ட தீவிரமான பக்கவிளைவுகள் ஏற்படும். ஆனாலும், இலட்சத்தில் ஒருவருக்குத்தான் இதுபோன்ற பாதிப்பு ஏற்படும். இலட்சத்தில் ஒருவருக்கு அனபிலாக்ஸிஸ் ஏற்படும் என்பதைவிட, கொரோனா பாதிப்பால் 780 பேருக்கு ஒருவர் உயிரிழக்கிறார் என்பதுதான் அதிக பாதிப்பாக இருக்கிறது. ஆகவே, நாம் இதற்குத்தான் முதலில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பெரும்பாலான மக்கள் தடுப்பூசி போட்டுக்கொள்வதன் மூலம்தான் கொரோனா பெருந்தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும் என மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வல்லுனர்கள் வலியுறுத்துகின்றனர். தடுப்பூசியின் பயன்களை சரியான முறையில் கொண்டுசெல்வது, அபாயங்களை ஒப்புக்கொள்வது ஆகியவை மக்களின் நம்பிக்கையை பெறுவதில் முக்கியமானவையாக இருக்கின்றன.

கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் தங்களுடைய அனுபவங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதன் மூலம் தடுப்பூசி தொடர்பான பயத்தை நீக்க முடியும் எனவும் வல்லுனர்கள் கூறுகின்றனர். தற்போது, பதிவாகும் கொரோனா பாதிப்பு எண்ணிக்கையை விட அதிகமாக தடுப்பூசி எண்ணிக்கை உள்ளது. தடுப்பூசி தொடக்க நிலையில் செலுத்தும் நிலையிலேயே உலகம் முழுவதும் கொரோனா தொற்று கட்டுக்குள் வந்துகொண்டிருக்கிறது. ஆக, இந்த தடுப்பூசிதான் நம்முடைய அறிவியல் வளர்ச்சிக்கு ஆகச்சிறந்த உதாரணமாக உள்ளது.



# மீனவர்கள் விடுதலை எப்போது?

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 68 பேரை விடுப்பது தொடர்பாக இலங்கை அரசுடன் கொழும்பிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் பேசி வருவதாக மத்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதியைச் சேர்ந்த 55 மீனவர்கள், இலங்கைக் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் டிசம்பரில் கைதுசெய்யப்பட்டனர்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 13 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் கடந்த டிசம்பர் 20 அன்று கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுவிக்க இலங்கை அரசுடன் பேசி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

இந்த விவகாரம் குறித்து தமிழக எம்.பிக்கள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குரல் எழுப்பினர். மீனவர்கள் விவகாரம் பற்றி விவாதிக்க வேண்டும் எனக் கோரி மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார். இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி அறிக்கை வெளியிட்டார்.

கடந்த டிசம்பர் 18 முதல் 20 வரையிலும் தமிழகத்தைச் சேர்ந்த 68 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். அவர்களது 10 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். இது பற்றி இந்திய அரசு கவலை கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரக உயர் அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களை சந்தித்து, தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான உடைகள், முகக்கவசங்கள், குளியலறைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

மேலும், உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. தடுப்புக் காவலிலுள்ள மீனவர்களுக்கு சட்டபூர்வ வசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்களை முன்கூட்டியே விடுவிப்பது தொடர்பாகவும் பேசி வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் விவகாரம் தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இந்த விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வரும் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"இதுபோன்ற அச்சமூட்டும் தாக்குதல்கள் தொடர்வதைத் தடுத்திட உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பாக். நீரிணையில் மீன் பிடிப்பதற்கான பாரம்பரிய உரிமையை நிலைநாட்டுவதும், மீனவர்களின் உயிர்-உடைமைகளைக் காப்பதும் நமது கடமையாகும் என்று தமிழக முதல்வர் மத்திய வெளியுறவு அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை பொங்கல் பண்டிகைக்குள் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்படையினர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களை படகுகளுடன் அடுத்தடுத்த நாட்களில் சிறைபிடித்துச் சென்றனர். மொத்தம் 68 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைகள் 1974 ஆம் ஆண்டு இலங்கை-இந்தியா இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை மீறுவதாக உள்ளது. எனவே, தமிழக மீனவர்கள் 68 பேரையும் இலங்கையிலிருந்து மீட்டு ஒப்படைக்கும்படி மத்திய, மாநில அரசுகளை மீனவ அமைப்புகள் கேட்டுக் கொண்டன.

இதனால் எந்தப் பயனும் இல்லாமையால் நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். இம்மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்றம் தமிழக மீனவர்கள் 68 பேரையும் மீட்க இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அறிக்கை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவு இட்டிருந்தது.

மத்திய அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் கைதுசெய்யப்பட்டுள்ள 68 மீனவர்களில் சிறுவர்கள் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மீனவர்களை விடுவிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மத்திய அரசு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில், கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மீன்பிடித்தொழில் செய்பவர்களே தவிர, தீவிரவாதிகள் இல்லை. அவர்கள் துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், மீனவர்களின் உடலில் கிருமிநாசினி தெளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது மனித உரிமை மீறல் இல்லையா என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு மத்திய அரசு தரப்பில், கொரோனா நோய்த்தொற்று காரணமாக மீனவர்கள் மீது கிருமிநாசினி தெளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

"கொரோனா தொற்றைக் கண்டுபிடிக்க பி.சி.ஆர். சோதனைகள் செய்வார்களே தவிர, இவ்வாறு உடல் முழுதும் கிருமிநாசினி தெளிக்கமாட்டார்கள். மீனவர்கள் கண்ணியத்துடனும், மனிதநேயத்துடனும் நடத்தப்பட வேண்டும். தமிழக மீனவர்கள் அனைவரும் பொங்கலுக்கு முன்னதாக விடுவிப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் கூறினர்.

தமிழக மீனவர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் பொங்கல் கொண்டாட வந்து விடுவார்கள் என்று நீதிமன்றம் நம்புகிறது. ஆனால், பாதிக்கப்பட்ட மீனவர்கள் நம்ப வேண்டுமே..!

இலங்கை, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளன தமிழக மீனவர்களை, ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை மீன்பிடித்துறை அமைச்சரும், வடக்கு மாகாண மீனவர்கள் சங்கத்தினரும் சந்தித்து உலர் உணவுப்பொருட்களை வழங்கியுள்ளனர். அப்போது இந்திய மீனவர்களிடம் யாழ்ப்பாணம் மீனவர் சங்கத் தலைவர் பேசியுள்ளார். இலங்கைக் கடற்பரப்பில் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடிப்பில் ஈடுபடுவதால் அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அவர்களிடம் தெரிவித்தார்.

அதன்பின் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது, "சிறையிலுள்ள மீனவர்கள் எங்கள் துன்பத்தைப் புரிந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் சக்தி வாய்ந்த நபர்களுக்குச் சொந்தமான இழுவைப் படகுகளில் தினக்கூலிகளாக வேலை செய்கின்றனர். அவர்களின் விடுதலைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல என்று கூறியுள்ளனர்.

இவ்வாறு தமிழ்நாட்டு மீனவர்கள் கைதுசெய்யப்படுவதும், விடுவிக்கப்படுவதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகளாகி விட்டன. இப்படியே இது தொடர்ந்தால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் என்ன ஆவது? அவர்களுடைய குடும்பம் எப்படிப் பிழைக்கும்?

2021இல் மட்டும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் 19 முறை தாக்குதல் நடத்தியுள்ளனர். பல்வேறு நிகழ்வுகளில் பல படகுகள் அழிக்கப்பட்டு 5 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை 73 படகுகளை பறிமுதல் செய்து வைத்துள்ளனர்.

2021 நவம்பர் மாதம் குஜராத் கடற்கரை அருகே பாகிஸ்தான் கடற்படையால் இந்திய மீனவர் ஒருவர் கொல்லப்பட்டபோது, பாகிஸ்தான் தூதரக அதிகாரிக்கு வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்து அழைப்பாணை அனுப்பியது. ஆனால், தமிழக மீனவர்கள் கொல்லப்படும்போது மத்திய அரசு மௌனம் காக்கிறது. இது நியாயமா?

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக வழக்குப் பதிவு செய்து, அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி யாழ்ப்பாணம் சிறையில் அடைத்துள்ளனர். இலங்கைக் கடற்படையின் இந்த நடவடிக்கையைக் கண்டித்தும், கைதுசெய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்கக் கோரியும் இராமேஸ்வரம், மண்டபம் மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

மீனவர் பிரச்னை தலைதூக்கும்போதெல்லாம் கச்சதீவு பிரச்னையும் தலையெடுக்கும். அந்த அளவுக்கு அவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அதை இரு நாடுகளும் கவனத்தில் கொள்வது நல்லது.

கச்சதீவு ஆண்டாண்டு காலமாக தமிழகத்துக்குச் சொந்தமாக இருந்து வந்தது. அதுவே தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு எல்லையாகவும் இருந்து வந்தது. அதனை இந்திய அரசு, 1974 ஆம் ஆண்டு இலங்கைக்குக் கொடுத்து விட்டது. அப்போது முதலே தமிழக மீனவர்களின் பிரச்னை தொடங்கி விட்டது.

1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சத்தீவை இலங்கைக்கு அளித்தது. 1976-ஆம் ஆண்டு ஒப்பந்தம், கச்சதீவு பகுதிக்கு தமிழக மீனவர்கள் போகவும் கூடாது, மீன் பிடிக்கவும் கூடாது, அங்குள்ள அந்தோனியார் திருவிழாவுக்கும் மக்கள் போகக்கூடாது என்று முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

1991 ஆம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா கச்சதீவை மீட்கப்போவதாக சபதம் செய்தார். தமிழக மீனவர்களின் நலனைக் காக்க கச்சதீவை மீட்போம் என்ற முழக்கத்தை முன்வைத்தார். 1991 ஒக்டோபரில் தமிழக சட்டப்பேரவையில் இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்போது கச்சதீவை மீட்க முடியவில்லை என்றாலும், அங்கு தமிழக மீனவருக்கு மீன்பிடி உரிமை வேண்டும். இதனை 1976 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யலாம். இந்திய வெளியுறவுத்துறை இதில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களும் இந்திய மீனவர்களே என்பதை உணர வேண்டும்.

புதிய ஆண்டு பிறந்தபோது தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் இருந்தனர். இப்போது தமிழர்களின் தேசிய விழாவான பொங்கல் திருநாள் வரப் போகிறது. அப்போதாவது அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பொங்கல் கொண்டாட வேண்டும் என்பது தமிழக மக்கள் அனைவரின் விருப்பமாகும்.

**• உதயை மு.வீரையன்**
**எழுத்தாளர்**

## தவறுக்கு வருந்துகிறோம்

எமது பத்திரிகையின் நேற்றைய நான்காம் பக்கத்தில் வெளியான சர்வதேச மனித உரிமைகள் தினம் குறித்தான ஆசிரியர் தலையங்கத்திலும், 'இன்றைய நாளில்' பகுதியிலும் ஜனவரி 10 ஆம் திகதி என்பதற்கு பதிலாக டிசம்பர் 10 ஆம் திகதி என்று, அதற்கேற்பவே விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

தவறுக்கு வருந்துகிறோம். இப்படியான தவறுகள் இனிமேலும் வராதிருக்க உறுதி கூறுகிறோம். (ஆ-ர்)

## இன்றைய நாளில்...

* 1569 – முதலாவது குலுக்கல் பரிசுச்சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.
* 1571 – ஒஸ்திரியாவில் உயர்குடியினருக்கு சமய சுதந்திரம் வழங்கப்பட்டது.
* 1787 – யுரேனஸின் டைட்டானியா, ஒபரோன் ஆகிய இரண்டு சந்திரன்களை வில்லியம் ஏர்செல் கண்டுபிடித்தார்.
* 1911 – 'கொம்ரேட்' என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மௌலானா முகம்மது அலி கல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.
* 1922 – நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
* 1957 – ஆபிரிக்க உடன்பாடு டக்கார் நகரில் எட்டப்பட்டது.
* 1966 – இந்திய-பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த தஷ்கண்ட் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி மாரடைப்பால் காலமானார்.
* 1972 – கிழக்கு பாகிஸ்தான், வங்காளதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
* 2007 – செயற்கைக்கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

## நக்கல் நமசிவாயம்

அப்போ அப்பத்த பேமஸ் ஆக்கின மைத்ரி, இந்த முறை எதை பேமஸ் ஆக்கப்போறாரோ...



# தென் கடலில் 18 மணிநேரம் தத்தளித்த மீனவர்!

## காலியிலிருந்து 07 கடல் மைல் தொலைவில் அவதியுற்ற நிலையில் கடற்படையினரால் மீட்பு

### சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதி







பலநாள் மீன்பிடிப் படகிலிருந்து தவறி விழுந்து 18 மணி நேரத்திற்கும் மேலாக கடலில் தத்தளித்த மீனவரொருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

தங்காலை கடற்பரப்பில் லக்விது 3 என்ற பலநாள் மீன்பிடிப் படகிலிருந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவரொருவர் கடந்த 08ஆம் திகதி பிற்பகல் கடலில் விழுந்துள்ளார். இந்நிலையில், சுமார் 18 மணிநேரங்களின் பின்னர் குறித்த மீனவர் நேற்றுமுன்தினம் (09) கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்டு காலி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

லக்விது 3 என்ற பல நாள் மீன்பிடிப் படகு கடந்த 07ஆம் திகதி காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 06 மீனவர்களுடன் கடலுக்கு சென்றுள்ளது. அவர்களில் மீனவர் ஒருவர் கடந்த 08ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் தங்காலையிலிருந்து 08 கடல் மைல் (15 கிலோமீற்றர்) தொலைவில் தெற்கு கடற்பரப்பில் மீன்பிடி இழுவைப்படகில் இருந்து கடலில் விழுந்து காணாமல்போனதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம், கடற்படைத் தலைமையகத்தில் நிலைகொண்டுள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திடம் தெரிவித்துள்ளது. அதனையடுத்து குறித்த மீனவரை தேடுவதற்கு உதவுமாறு கடற்படையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, தங்காலை முதல் காலி வரையிலான கடற்பகுதியில் கடற்படையினரால் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தவிர, அப்பகுதியில் உள்ள ஏனைய மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் படகுகளுக்கும் இச்சம்பவம் குறித்து தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் (09) காலை காலியில் இருந்து 07 கடல் மைல் (13 கி.மீ.) தொலைவில் தெற்கு கடற்பகுதியில் மிதவையின் உதவியுடன் தத்தளித்துக் கொண்டிருந்தநிலையில் குறித்த மீனவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். சுமார் 18 மணித்தியாலங்களுக்கு மேலாக நீரில் மிதந்து ஆபத்தான நிலையில் இருந்த குறித்த மீனவருக்கு ஏ - 543 கப்பலில் வைத்து தேவையான முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். அதன் பின் மேலதிக சிகிச்சைக்காக கடற்படை மருத்துவப் பணியாளர்கள் அவரை காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஸ்ரீ லங்கா மහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


## 10.01.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 1522 | 036 1465 |
| கனேடியன் டொலர் | 044 8218 | 050 7067 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 7530 | 21 0128 |
| யூரோ | 113 6630 | 122 5030 |
| ஜப்பான் யென் | 0 6 45 | 0 66 2 |
| சிங்கப்பூர் டொலர் | 035 70 | 04 6025 |
| ஸ்ரேலிங் பவுன் | 157 44 3 | 165 8773 |
| சுவிஸ் பிராங்க் | 103 510 | 111 1622 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 386 |
| குவைட் | குவைட் தினார் | 556 336 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 3005 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 008 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7077 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8564 |

# பாரி பவுஸ் தன்னலம் பாராது சமூகத்துக்கு தொண்டாற்றியவர்

### - முஸ்லிம் கவுன்ஸில் ஒப் சிறிலங்காவின் தலைவர் அனுதாபம்



முஸ்லிம் கவுன்ஸிலின் பொருளாளரும், சமூக சேவையாளருமான பாரி பவுஸ்ஸின் மறைவு, தன்னலம் பாராது நாட்டுக்கும், சமூகத்துக்கும் தொண்டாற்றிய சிறந்த மகனை இல்லாமல் செய்துள்ளதாக முஸ்லிம் கவுன்ஸிலில் ஒப் சிறிலங்காவின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸில் பொருளாளரும், சமூக சேவையாளருமான பாரி பவுஸ் (70) ஞாயிறன்று காலமானார்.

ஸ்பீட் பிளம்பர் நிறுவனத்தின் உரிமையாளரான இவர், ஆரம்பத்திலிருந்தே முஸ்லிம் கவுன்ஸிலின் பொருளாளராகப் பணிபுரிந்து வந்தார்.

முஸ்லிம் கவுன்ஸிலின் பணிகளுக்காக கொழும்பு 05இல் உள்ள இவரது வீட்டையே வழங்கியிருந்தார். முஸ்லிம் கவுன்ஸிலின் வளர்ச்சியில் இவரும் இவரது துணைவி ஹாஜியானி சாதிகாவும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

ஹவ்லொக் டவுன் பள்ளிவாசலின் தலைவராகப் பணிபுரிந்த இவர், வெள்ளவத்தை இஸ்லாமிய கற்கை நிலையத்தில் (சி.ஐ.எஸ்.) கடந்த பத்து வருடங்களாகப் பணிபுரிந்து வந்தார்.

இவரது மறைவு, தன்னலம் பாராது நாட்டுக்கும், சமூகத்துக்கும் தொண்டாற்றிய சிறந்த மகனை இல்லாமல் செய்துள்ளது. இவரது மறுமைக்காகப் பிரார்த்திப்பதோடு, இவரது பிரிவினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொறுப்பை நிறைவேற்ற தவறிவிட்டது

### - திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மின்வெட்டுக்கான அனுமதியை வழங்கி, அதன் பொறுப்பை நிறைவேற்ற தவறிவிட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலிருந்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை சட்டப்பூர்வமாக நிறுத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது என்பது மிகவும் பாரதூரமான விடயமாகும். நாட்டில் நுகர்வோர் மற்றும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உள்ளது. நுகர்வோரை சிரமப்படுத்தும் வகையில் மின்சாரத்தை துண்டிக்க இதுபோன்ற ஆணைக்குழுக்கள் சட்டரீதியான அனுசரணையை வழங்குவது மிகவும் ஆபத்தானவை.

மக்களையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் நோக்கத்தையும் அதன் பொறுப்பையும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிறைவேற்ற தவறியுள்ளது. இது நியாயமான விடயம் அல்ல. ஏன் இப்படி இரவில் இரண்டு மணி நேரம் மின்வெட்டை மேற்கொள்ள சட்டப்பூர்வமாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது இயற்கையான காரணமல்ல, மழை இல்லாத பிரச்சினையும் இல்லை, ஜெனரேட்டர் இயங்குவதில் பிரச்சினைகளும் இல்லை. எரிபொருளை முறையாக வழங்கத் தவறிய அரசாங்கத்தின் தவறுதான் இந்த வெட்டுக்கு காரணமாகும்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் மின்சக்தி அமைச்சு இப்போது ஒருவரையொருவர் குற்றம் சாட்டி, பொது சேவையை வழங்குவதைத் தவிர்க்க முயற்சிக்கிறது. இது உலகில் எங்கும் நடக்காத ஒரு விடயம். உலகில் இப்படி ஒரு நிகழ்வு நடப்பது இதுவே முதல் முறை. மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்க சட்டம் அனுமதிப்பது இதுவே முதல் முறை.

எனவே தற்போது அரசாங்கம் இருக்கின்றதா என்று கேட்கின்றோம். அமைச்சுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இழுபறியில் காட்டப்படுவது இந்த நாட்டை ஆளுவதற்கு சிறந்த தலைவரோ அரசாங்கமோ இல்லை.

சிக்கன நடவடிக்கைகளால் நாட்டிற்கு மின்சாரம் நாட்டை ஒளிரச் செய்வதற்கு மட்டுமல்ல, நாட்டின் உற்பத்தி, தேசிய பாதுகாப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

## தத்துவம் தங்கராசு



நாடளாவிய ரீதியில் தற்போது ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள எரிவாயு வரிசைகள் காரணமாக அந்த வரிசையில் நிற்பதே பலருக்கு வருமானத்துக்கு வழிவகுத்திருக்கிறது தெரியுமா?

வரிசையில் காத்திருக்க பலர் சிரமப்படுவதால் அதற்காக வரிசையில் நின்று இடம்பிடித்துக்கொடுக்க தலா 500 ரூபா அறவிடப்படும் வியாபாரம் நடந்துவருகிறது. இதனால், ஒருவர் காஸ் சிலிண்டர் ஒன்றைப் பெற கூடுதல் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. பல பேர் இதனை ஒரு தொழிலாகவே செய்வதாக தகவல்.

புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதாக அரசாங்கம் சொன்னது இதைத்தானா?

# நாட்டுக்கு பெறுமானத்தைக் கொண்டு சேர்க்கும் அரசியலுக்காக எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு





பாரம்பரிய அரசியலில் இருந்து விலகி நாட்டுக்கு மதிப்புச் சேர்க்கும் அரசியலில் ஈடுபடும் அனைத்து தரப்பினருக்கும் தான் அழைப்பு விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்தப் பேரிடர் நேரத்திலும் கூட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர் எனவும், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய அமைச்சு என்பன கூட்டாக முடிவெடுக்க முடியாத அளவிற்கு சீரழிந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' நிகழ்ச்சியில் நேற்று (10) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த, அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய திறமையான இளம் தலைமுறையை உருவாக்கும் நோக்கில், வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான பிரபஞ்சம் திட்டத்தின் 8ஆவது கட்டம் நேற்று (10) ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன உலகில் வளமான டிஜிட்டல் எதிர்காலத்திற்காக இந்நாட்டின் இளைய தலைமுறையை, தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற, ஸ்மார்ட் கணினி பயன்பாட்டில் தேர்ச்சிப் பெற்ற சமூகமாக கட்டியெழுப்பும் பிரபஞ்சம் முன்னோடித் திட்டத்தின் ஏழாவது கட்டத்தில், 07 இலட்சத்து 50ஆயிரம் ரூபா மதிப்பிலான வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை கிளிநொச்சி, பரந்தன் இந்துப் பாடசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (10) வழங்கி வைத்தார்.

## ஹப்புத்தளை நகரில் பனிமூட்டம்; வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை



*(பதுளை நிருபர்)*

ஹப்புத்தளை நகரம், ஹப்புத்தளை – பெரகல பிரதான பாதை, ஹப்புத்தளை – பண்டாரவளை பாதை ஆகியவற்றில் நேற்று (10) பனியுடன் மேகங்களும் சூழ்ந்து காணப்பட்டன. கடுங்குளிரான காலநிலையும் நிலவி வருகின்றது.

வாகன சாரதிகளை மிகுந்த எச்சரிக்கையுடன் வாகனங்களை செலுத்துமாறு ஹப்புத்தளை பொலிஸார் ஒலிபெருக்கிகள் மூலமும், நேரடியாகவும் வாகன சாரதிகளைக் கேட்டுள்ளனர்.







பாடசாலைகளின் சகல வகுப்புகளுக்குமான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஹட்டன் கல்வி வலயத்தை சேர்ந்த மாணவர்கள் நேற்று (10) பாடசாலைக்கு ஆர்வமாக சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# அமைச்சுப் பதவிக்காக மலையக மக்களின் வாக்குகளை வியாபாரம் செய்வது நியாயமா?

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் கேள்வி

(தலவாக்கலை நிருபர்)

ஓர் இனத்தின் அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக அந்த இனத்தின் வாக்குகளை அணிதிரட்டி தேசிய கட்சிகளுடன் பேரம் பேசுவதே சிறுபான்மை இனத் தலைவர்களின் அரசியல் இலக்காக இருக்க வேண்டுமே தவிர, அமைச்சுப் பதவி ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக மலையக மக்களின் வாக்குகளை வைத்து மொத்த வியாபாரம் செய்வது எந்தவகையில் மலையக மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் அரசியல் இலக்காக இருக்க முடியும்? - என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான கணபதி கனகராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்து அவர் நேற்று (10) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய மக்கள் சக்தியை ஆட்சிபீடம் ஏற்றி அதன்மூலம் கிடைக்கும் அமைச்சுப் பதவியை இலக்குவைத்து முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தை அரசியல் முதிர்ச்சியற்ற கருத்தாகவே நாம் கருதுகிறோம்.

சுதந்திரத்துக்குப் பின் இந்த நாட்டில் ஆட்சிபீடமேறிய எந்தவொரு அரசாங்கமும் தாமாக உணர்ந்து இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று எண்ணியது கிடையாது. கிடைத்திருக்கின்ற அற்பசொற்ப உரிமைகள் மற்றும் சலுகைகள் என்பன பேரம்பேச்சுகள், அரசியல் நிர்ப்பந்தங்கள், உள்நாட்டு



வெளிநாட்டு அழுத்தங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் என்பவற்றின் மூலம் அடையப்பெற்றவையாகும்.

இந்நாட்டில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒன்றுபட்ட சக்தியாக இருந்த சிறுபான்மை மக்களை பல்வேறு கூறுகளாக பிரித்து அரசியல் சதுரங்கம் நடத்தியதே தவிர அவர்களை மக்களாக மதித்து சம உரிமை, சம அந்தஸ்து வழங்க முன்வரவில்லை. நாடு தற்போது எதிர்நோக்கும் இக்கட்டான நிலைக்கு தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் மட்டும் காரணமல்ல. இதற்கு முன்னர் நாட்டை ஆட்சிசெய்த சகல அரசாங்கங்களுக்கும் இதில் பங்குண்டு என்பதை எவரும் மறந்துவிட முடியாது. அரசாங்கத்தை அமைக்கும் கட்சிகள் மாறி மாறி வந்தாலும் அவர்களின் சிறுபான்மை மக்கள் தொடர்பான கொள்கையில் எவ்வித மாற்றமும் இருப்பதில்லை.

மலையக மக்களின் வாக்குரிமையை பறித்தவர்களும் தனிச்சிங்களம் சட்டத்தை கொண்டு வந்தவர்களும் சந்திரிக்கா அம்மையார் கொண்டுவந்த தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் கொளுத்தியவர்களும் இந்த நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்த கட்சியினர் என்பதை சிறுபான்மை கட்சித் தலைவர்கள் மறந்து விடக்கூடாது. நல்லாட்சிக் காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி உடைந்து ஐக்கிய மக்கள் சக்தியாக மாறியதற்கு கொள்கை பிரச்சினை காரணம் அல்ல, தலைமைத்துவப் பிரச்சினையே காரணமாகும். அந்த அரசாங்க காலத்தில் சிறுபான்மை மக்களின் எந்தவித பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை என்பதை எதிர்கால அவர்களின் அரசாங்கத்தில் அமைச்சராக வருவதற்கு எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு கசப்பான உண்மையாக இருந்தாலும் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். கடந்த நல்லாட்சி அரசாங்கம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டிருக்கவில்லை.

ஆனால், சிறுபான்மை மக்களின் உரிமைக்கு ஊன்றுகோலாக இருந்த மாகாண சபைகளை நடைமுறையிலிருந்து நீக்குவதற்கு தேர்தல்முறை மாற்றம் என்ற போர்வையில் சட்டத்திருத்தம் கொண்டுவந்து அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றுக்கொண்டது. மாகாண சபைகளை நடைபிணமாக்கிய நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஏன் சிறுபான்மை மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான எவ்விதமான சட்ட ஏற்பாடுகளை செய்ய முடியவில்லை.

இலங்கை வரலாற்றில் மீண்டும் ஒரு முறை சிறுபான்மை அங்கத்தவர்களைவைத்தே சிறுபான்மை மக்களின் கோவணத்துணியாக இருந்த மாகாண சபைகளை அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக்கிய நல்லாட்சி அரசாங்கமே இன்று சிறுபான்மைக் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கையொப்பமிட்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உதவுங்கள் என்று இந்தியாவிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்திடம் அல்லது சர்வதேசத்திடம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவதற்கு உதவுமாறு கோருவதில் தவறில்லை. அவ்வாறு கோருவதற்கு முன் இலங்கை அரசாங்கத்துடன் பேரம்பேசுவதற்கான ஒட்டுமொத்த சிறுபான்மை மக்கள் சக்தியும் ஒன்றுதிரட்டி இருக்கின்றோமா? மலையகத்தைப் பொறுத்தவரையில் எமது அரசியல் சக்தியின் ஊடாகவே பல உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். அமைச்சராகி அனைத்தையும் தீர்த்துவிடலாம் என்பது நடைமுறைக்கு பொருத்தமற்ற கருத்தாகும் - என்றார்.

# திகாம்பரத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள்



தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஹட்டன் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொழிலாளர் தேசிய



சங்கத்தின் முக்கியஸ்தர்களும் பணிமனை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# சமூக சேவை - மனித உரிமை செயற்பாடுகளுக்காக ஆனந்தகுமாருக்கு விருது வழங்கி கௌரவிப்பு

சிறந்த சமூக சேவை, சமூக அபிவிருத்தி மற்றும் மனித உரிமைச் செயல்பாடுகளில் ஈடுபட்டமைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் FAZLI RUMI CENTER அமைப்பு இச்சான்றிதழை வழங்கி கௌரவித்தது.

UNICEF, ISO SKY, AFRICAN DIASPORA,



AMERICAN INSTTUTE OF EXTENDED STUDIES உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளின் அனுசரணையுடன் இந்தச் சான்றிதழ் எஸ்.ஆனந்தகுமாருக்கு வழங்கபட்டுள்ளது.

எஸ்.ஆனந்தகுமார், ஐ.தே.கவின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டிருந்ததுடன், நீண்டகாலமாக சமூக சேவைகள் மற்றும் மனித உரிமைச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

கொவிட் தொற்று ஆரம்பமான காலம்முதல் தமது சொந்த நிதியின் ஊடாக பொதுமக்களுக்கு இவர் உதவிகளையும் நிவாரணங்களையும் வழங்கிவருகிறார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பெருந்தோட்டத்திற்கு மாவை விநியோகிக்க தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு எதற்கு?

## உதயகுமார் எம்.பி. கேள்வி

(க.கிஷாந்தன்)

மலையகத்தில் தனிவீட்டுத் திட்டத்தை முன்னெடுக்காத தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சானது தற்போது கோதுமை மாவை விநியோகிக்கப் பார்க்கின்றது. மாவை விநியோகிப்பதற்கு மலையகத்துக்கு எதற்கு அமைச்சு? இது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சா அல்லது மாவு விநியோக அமைச்சா? - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இராகலை, வலப்பனை நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது எங்கிருக்கின்றனர் எனத் தெரியவில்லை. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட எல்லா பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. அதுமட்டுமல்ல, பொருட்களை வாங்குவதற்கு வரிசையில் நிற்கவேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. இனிவரும் நாட்களில் எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம். அரிசி விலையும் சடுதியாக அதிகரிக்கப்படலாம். இவ்வாறு நாட்டுமக்களை இந்த ஆட்சியாளர்கள் படுபாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளனர்.

அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனியார்துறையினருக்கு அந்தக் கொடுப்பனவை வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், நாட்டில் வருமானமின்றி, பணத்தை அச்சிட்டு இவ்வாறு கொடுப்பனவுகள் வழங்குவதால் பிரச்சினைகள் தீராது. அது மேலும் நெருக்கடியையே ஏற்படுத்தும்.

அதேபோல், ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு வெறும் 500 ரூபாவுக்கு நிவாரணம். அதுவும் கோதுமை





மா. அந்த கோதுமை மாவைகூட தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ஊடாக விநியோகிக்கப்படும் என அந்த இராஜாங்க அமைச்சர் கூறுகிறார். மலையகத்தில் இன்னும் ஒரு வீட்டைக்கூட கட்டாத அந்த அமைச்சர் மாவை விநியோகித்து - அரசியல் செய்ய பார்க்கின்றார். திகாம்பரம் கட்டிய வீடுகளுக்குதான் அவர்கள் இன்று திறப்பு விழா நடத்துகின்றனர். மாவை விநியோகிக்க மலையகத்துக்கு எதற்கு அமைச்சு? அது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சா அல்லது மாவு விநியோக அமைச்சா?

அதேவேளை, மக்களால் விரைவில் இந்த அரசு விரட்டி அடிக்கப்படும். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆசியுடனேயே புதிய ஆட்சி மலரும். அதில் பலம்பொருந்திய அமைச்சராக திகாம்பரம் இருப்பார்" - என்றார்.

# ஹப்புத்தளை – வெலிமடை வீதியில் பள்ளத்தில் பாய்ந்து ஓட்டோ விபத்து



(பதுளை நிருபர்)

ஹப்புத்தளை – வெலிமடை பிரதான பாதையில் முச்சக்கரவண்டி பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து நேற்று (10) காலை இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டி பலத்த சேதங்களுக்குள்ளாகியதுடன், உயிராபத்துகள் எதுவும் இடம்பெறவில்லை.

முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதி உட்பட மூவருக்கு சிறு சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளன.

ஹப்புத்தளை பொலிஸார் இவ்விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கம்பளை இந்துக் கல்லூரி மாணவன் உலக சாதனை





(கம்பளை நிருபர்)

தமிழ்நாட்டை தலைமைச் செயலகமாகக் கொண்டு 26 நாடுகளில் கிளைகளை ஆரம்பித்து ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்றிவரும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையினூடாக ஒரு புதிய சோழன் உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கண்டி மாவட்டத்தின் கம்பளை கொப்பாவெல பகுதியில் அமைந்திருக்கும் கராத்தே பயிற்சி நிலையத்தில் கம்பளை இந்து கல்லூரியில் கல்வி கற்கும் பாடசாலை மாணவன் கிருஷ்ணபழனி - இந்திராணி தம்பதிகளின் புதல்வனுமான 20 வயதான தர்சன் எனும் இளைஞர் ஒரு நொடியில் 7 கராத்தே குத்துகளை (ஜுதான் சுகி) செய்து புதிய சோழன் உலக சாதனை படைத்தார்.

இச் சோழன் உலக சாதனை நிகழ்விற்கு இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அனுராத ஜெயரத்ன முன்னிலை வகித்தார். சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் முனைவர் யோகதாசன் ஜூட் நிமலன் மற்றும் கண்டி மாவட்ட தலைவர் பள்ளித் தலைமை ஆசிரியர் சந்திரகுமார் உள்ளிட்டோர் நடுவர்களாக கலந்துகொண்டு உலக சாதனை படைத்த மாணவனுக்கு சான்றிதழ் வழங்கினார்கள்.

'தென்ஷின்கான்' கராத்தே பாடசாலையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கராத்தேயில் 7th Dan பெற்ற சிகான் மனோஜ் உனன்தென்ன மற்றும் கராத்தேயின் 3rd Dan பெற்ற ஆசான் சந்திரமோகன் ஆகியோர் இந்த சோழன் உலக சாதனை நிகழ்வை ஒருங்கிணைத்து நடத்தினர்.

இந்நிகழ்வை தமிழ்நாட்டின் தலைமையகத்தில் இருந்து காணொளி வாயிலாக கண்காணித்து, சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நிறுவுனர் முனைவர் நீலமேகம், தலைமைச் செயற்குழுவின் வழக்கறிஞர் உயர்திரு கலைலிங்கம் மற்றும் தலைமை செயற்குழுவின் பொதுச் செயலாளர் திருமதி ஆர்த்திகா நிமலன் ஆகியோர் உறுதிசெய்தனர்

உலகில் அதிக கராத்தே குத்துகளை செய்து புதிய சோழன் உலக சாதனை படைத்த கராத்தே மாணவன் தர்சனை சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் 26 நாடுகளின் தலைவர்கள் மற்றும் இலங்கைவாழ் மக்களும், கம்பளை இந்துக் கல்லூரி பாடசாலை அதிபர் எஸ். ரகு, கம்பளை பிரதேச மக்கள், கம்பளை நகர சபை தலைவர் சமந்த அருணகுமார ஆகியோர் வாழ்த்திப் பாராட்டினார்கள்

## உப செயலகங்கள் திறப்பது

# 10ஆம் ஆண்டு மாணவனுக்கு இரண்டு ஐந்தாம் வகுப்பு புத்தகத்தை கொடுப்பதற்கு சமம்

## முன்னாள் எம்.பி. திலகர் சாடல்



நுவரெலியா மாவட்டத்தில் முழுமையான ஐந்து புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்கு வர்த்தமானி பிரகடனம் உள்ளபோதும் உப செயலகங்களை திறந்துவைத்துவிட்டு அவை முழுமையான பிரதேச செயலகங்களுக்கு சமமானவை என நியாயப்படுத்த முனையும் அரசியல்வாதிகளின் கருத்து, ஐந்தாம் வகுப்புப் புத்தகம் இரண்டு வாங்கினால் பத்தாம் வகுப்பு படிக்கலாம் என்பதற்கு ஒப்பானது - என முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்களை முழுமையாக அமைப்பதை வலியுறுத்தி மலையக அரசியல் அரங்கம் முன்னெடுக்கும் கையெழுத்து இயக்கத்துக்கு ஒருமைப்பாட்டைக் கோரும் சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (09) மெய்நிகர் வடிவில் இடம்பெற்றது.

முழுமையான பிரதேச செயலகங்களின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடலில் பங்கு கொண்டிருந்த பலரும் காத்திரமான கருத்துகள் பலவற்றை இதன்போது முன்வைத்தனர்.

தற்போதைய நிலைவரப்படி நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலாளரின் ஒரு கையெழுத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 50 முதல் 60 கிலோ மீற்றர் பயணிக்கும் சாதாரண பொதுமக்களின் அவலங்கள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டில் - வளப்பகிர்வில் உப செயலகம் உள்வாங்கப்படாது எனும் நிலை, காலி மாவட்டத்திற்கும் நுவரெலியாவுக்கும் பாரபட்சமான முறையில் திட்ட அமுலாக்கல், நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு கடந்த மூன்று தசாப்தங்களாக முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கை, அம்பகமுவை - நுவரெலியா ஆகிய பிரதேச செயலகங்களுக்கு கீழ் தலா இரண்டரை இலட்சம் சனத்தொக்கு பணியாற்ற முழுமையான பிரதேச செயகங்களின் அவசியம் போன்ற பலதரப்பட்ட நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து புதிய முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படவேண்டும் என்பதை இறுதி இலக்காகக்கொள்ள வேண்டும் என கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், பிரதேச செயலகமும் உப செயலகமும் ஒரே அதிகாரங்களைக் கொண்டவைதான் என அதனைத் திறந்துவைத்த அரசியல் தரப்பு கூறியதாக கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திலகராஜ்,

பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு ஐந்தாம் வகுப்பு புத்தகம் இரண்டு வாங்கிக் கொடுத்தால் சரியாகிவிடும் என எண்ணும் அரசியல்வாதிகளின் போக்கு இது என தனது விமர்சனத்தை முன்வைத்தார்.

இவர்களைப் புரிந்துகொண்டு சமூகமாக சாத்தியமான தீர்வுகளை நோக்கி நாம் ஜனநாயக ரீதியாக எமது நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டும். அதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி எனவும் தெரிவித்தார்.

தமிழன்
www.thamilan.lk
வணிக உலகம்
Business world
GROWTH

# வடபகுதியின் பொருளாதாரம் மற்றும் மக்களை உயர்த்தவிருக்கும் எசட்லைன் லீசிங்



- யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே செயலமர்வில் உரையாற்றுகின்றார்.



யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற செயலமர்வில் யாழ்ப்பாண பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 16 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸார் பங்கேற்றுள்ளனர்.




எசட்லைன் வடக்கு, எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வணிக மற்றும் நிதி சேகரிப்பு நிலையமாக நியமிக்கப்பட்டுள்ள சுன்னாகம் சி.கே.மோட்டர்ஸ்.

எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் (ALCL) நிறுவனம் வடபகுதியில் தனது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக பல்வேறு திட்டங்களை அண்மையில் அறிமுகப்படுத்தியது. டேவிட் பீரிஸ் குழும நிறுவனத்தின் நிதிச் சேவை நிறுவனமான எசட்லைன் நிதி வழங்குதல் மற்றும் வசதி குறைந்த பொருளாதார வகுப்பினர், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு நிதியுதவி வழங்குதல் போன்றவற்றால் நன்மதிப்பைப் பெற்றிருப்பதுடன், தனது வர்த்தக நாமத்தையும் கட்டியெழுப்பியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சிகள் வட மாகாணம் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கும், அம்மாகாணத்தின் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும் வழிவகுக்கும் என அவர்கள் நம்புகிறார்கள்.

டேவிட் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் நீண்டகால முகவராகச் செயற்பட்டுவரும் யாழ்ப்பாணம், சுன்னாகம் சி.கே.மோட்டர்ஸ், குழுமத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் ஒருங்கிணைப்புக்கமைய எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வணிக மற்றும் நிதி சேகரிப்பு நிலையமாக நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் நிறுவனத்தின் கிளைகளுக்கப்பால் வாடிக்கையாளர்கள் தமது லீசிங் கொடுப்பனவுகளை இங்கு மேற்கொள்ள முடியும். சி.கே.மோட்டர்ஸ் நிறுவனம், DPMC சான்றிதழ் அளிக்கப்பட்ட முச்சக்கரவண்டிகளை வழங்குவதற்கப்பால், உடனான கூட்டாண்மை மற்றும் நிதியுதவி அளித்தல் மூலம் அதன் வணிகச் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

கொக்குவில் பகுதியில் பிரபல்யமான 'ஜப்னா வெஹிகிள் ஸ்பொட்' நிறுவனம் நிதி உதவிகளைத் தேடும் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் வணிக அறிமுகப்படுத்துனராக நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குழுமத்தின் ஓர் அங்கமான பதிவுசெய்யப்பட்ட வாகன விற்பனை நடவடிக்கையான 'ரியசக்வல' உடன் நிறுவனத்தை இணைத்துக்கொள்வது தொடர்பான பேச்சுகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. இதன்மூலம் வாகனங்கள் மற்றும் உடனடியான லீசிங் தீர்வுகளை ஒரே இடத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

உள்ளூர் சமூகத்துக்கான அவர்களின் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகே, யாழ்ப்பாண தலைமையகத்தின் பிரதான இன்ஸ்பெக்டர் சம்லி பலிகஹேன மற்றும் ஏனைய அதிகாரிகளின் வழிகாட்டலின்கீழ் போக்குவரத்துப் பொலிஸாருக்கு ஏற்பாடுசெய்யப்பட்ட செயலமர்வுக்கும் அனுசரணை வழங்கியிருந்தது. கொழும்பு பொலிஸ் தலைமையகத்திலிருந்து வளவாளர்கள் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிலுள்ள 16 பொலிஸ் நிலையங்களிலிருந்து 100இற்கும் அதிகமான போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர். வீதிப் பாதுகாப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்துவது இதன் நோக்கமாக அமைந்தது.

இந்த முயற்சிகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த அசட்லைன் லீசிங் நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி மகேஷ் டி. சில்வா குறிப்பிடுகையில், "பொறுப்பான நிதி நிறுவனம் என்றவகையில், அரசாங்கத்தின் வட மாகாண அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் திட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இம்முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அவர்களால் கோடிட்டுக் காட்டப்பட்ட வீதி வரைபடத்தின் அடிப்படையில் இத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். பிராந்தியத்திலுள்ள மக்களுக்கும், கம்பனிக்கும் இது வெற்றிச்சூழலை ஏற்படுத்தும்" - என்றார்.

2003ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அசட்லைன் லீசிங், நாட்டின் மிகப்பெரிய சிறப்புவாய்ந்த லீசிங் நிறுவனங்களில் ஒன்றாக விளங்குவதுடன், சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தையும் கொண்டுள்ளது. எசட்லைன் நாட்டின் அனைத்து முக்கிய பகுதிகளையும் உள்ளடக்கியதாக 54 கிளைகளைக்கொண்டிருப்பதுடன், பலதரப்பட்ட வாடிக்கையாளர் தளத்தின் தேவைகளுக்கேற்ப பலவிதமான புதுமையான தீர்வுகளை வழங்குகிறது.

# ராணி சந்தன சோப் புதிய தோற்றத்துடன் 80 ஆண்டுகால அழகைக் கொண்டாடுகிறது




திருமதி ஏ.எம்.விஜேவர்தன - The Swadeshi Industrial Works PLC இன் தலைவர், கொழும்பு 03, Barefoot Gallery இல் நடைபெற்ற ராணி புதிய தோற்ற அங்குரார்ப்பண நிகழ்வின்போது ராணி சந்தன சோப்பின் புதிய தோற்றத்தை அறிமுகம் செய்தார்.

எட்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையின் அழகு சவர்க்காரங்களில் தனிச்சிறப்புமிக்க ராணி சந்தன சவர்க்காரம், ராணிபோல் பிரகாசிக்க வேண்டும் எனும் கருப்பொருளின்கீழ் 80 ஆண்டுகால ஒப்பற்ற தரத்தை நினைவுகூருகின்றது.

1941ஆம் ஆண்டில் கந்தானையிலுள்ள சுதேசி உற்பத்தி நிலையத்தில் ராணி சவர்க்காரம் முதன்முதலில் உருவாக்கப்பட்டு சந்தையில் வெளிவந்த முதலாவது இலங்கை அழகு சவர்க்காரம் எனும் பெயரை அது பெற்றது. இன்று நாட்டில் மிகவும் பிரபலமான மற்றும் நம்பர் 01 சந்தன அழகு சவர்க்கார தரக்குறியீடான ராணி சந்தன சவர்க்காரம் அதன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்று அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது தொடர்பில் சுதேசி நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

The Swadeshi Industrial Works PLC இன் தலைவரான திருமதி ஏ.எம்.விஜேவர்தன தெரிவிக்கையில், "தயாரிப்பில் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் மற்றும் தரநிலையின் நிலையான உயர்வு தொடர்பிலான அர்ப்பணிப்புடன் ராணி சந்தன சவர்க்காரம் இலங்கையில் அழகுப் பராமரிப்பு உற்பத்திகளின் உச்சத்தில் உள்ளது. ராணி சவர்க்காரமானது, இலங்கையில் மாத்திரமல்லாது கடல் கடந்து சர்வதேச சந்தையிலும் தனது பெயரை நிலைநாட்டியுள்ளது" - என்றார்.

Swadeshi Industrial Works PLC ஆனது, அதன் அதிநவீன வசதிகள், நவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுடன், உற்பத்தி முறைமைகளைப் பயன்படுத்தி புதுவகையான அழகு மற்றும் தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்களை சந்தைக்குக் கொண்டு வந்து, வாடிக்கையாளர்களின் விருப்பங்களை அறிந்து அவர்களை மகிழ்விக்கிறது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) தொடர்பில் சுதேசி நிறுவனம் மேற்கொண்டுள்ள முதலீட்டை காணும்போது இம்முக்கியத்துவம் தெளிவாகத் தென்படும். இந்நிறுவனம் அதிநவீன தொழில்நுட்ப ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ளதுடன், அதன் செயன்முறைகள் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் SLSI), ISO 9001 – 2015 தரச் சான்றிதழை பெற்றுள்ளது.

1960 முதல் 1980 வரையிலான காலப்பகுதியில் இலங்கை அழகிப் போட்டிகளான 'Miss Ceylon' மற்றும் 'Miss Sri Lanka' ஆகியவற்றிற்கு அனுசரணை வழங்கி வந்ததன் மூலம் ராணி சவர்க்காரம் இலங்கையின் அழகிகளுக்கு வழங்கும் அங்கீகாரத்திற்கான அசைக்க முடியாத ஆதரவை காண்பிக்கிறது.

சந்தனம் பல நூற்றாண்டுகளாக அரச குடும்பப் பெண்களின் அழகின் இரகசியமாக இருந்துவருகிறது. சந்தன மரப்பட்டையை கல்லில் தேய்த்து பெறப்படும் இயற்கையான கலவையை சருமத்தில் பூசி அலங்கரிப்பதன் மூலம் இளவரசிகள் மற்றும் பெண்கள் தங்களது சருமத்தை மென்மையாக்கவும், எண்ணெய்ப் பசையை குறைக்கவும், சருமத்தை அழகுபடுத்தவும், அழகிய நிறத்தைப் பேணவும் பயன்படுத்தி வந்தனர்.

சந்தனம் வெளிப்புறத் தோலின் அழகை மட்டுமல்லாது, இரத்த ஓட்டத்தை சீராக்கும் மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளதன் மூலம் சருமத்திற்கு இயற்கையான பளபளப்பைத் தருகிறது. இந்த மருத்துவக் குணங்கள் தோல் நோய்களைத் தடுப்பதுடன், வியர்வையின் விளைவுகளை கட்டுப்படுத்தி உடலை குளிர்விக்க உதவுகிறது. எனவே, நமது முன்னோர்கள் மத்தியில் சருமத்தை அழகுபடுத்துவதில் சந்தனம் மிகவும் பயனுள்ள மூலிகை மருந்தாக இருந்து வந்துள்ளது.

இனிய வாசனைகளை நினைவுபடுத்தும்போது இயற்கையாகவே சந்தனம் நம் நினைவுக்கு வருகின்றது.

வழங்கல், கொவிட்-19 தொற்றுநோய்களின்போது குழந்தைகளை நோக்காகக்கொண்ட வீடியோ மூலமான கைகளை கழுவுதல் தொடர்பான விழிப்புணர்வுகள், வேம்பு மர நடுகை பிரசாரங்கள், இலங்கையின் வறண்ட வலயத்திலுள்ள சமூகத்தினர் மற்றும் பாடசாலைகளுக்கு தண்ணீர்த் தொட்டிகளை நன்கொடையாக வழங்குதல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குழந்தை பராமரிப்புப் பரிசுகள் போன்றவற்றை வழங்குதல் ஆகியன நிறுவனத்தின் பல சமூகநல முயற்சிகளாகும்.

இலங்கையில் மூலிகையுடனான தனிநபர் பராமரிப்புப் பிரிவின் முன்னோடியும் சந்தையின் முன்னணி நிறுவனமுமான Swadeshi Industrial Works PLC நிறுவனம் 1941இல் கூட்டிணைக்கப்பட்டது. ராணி சந்தனம், சுதேசி கொஹோம்ப, சுதேசி கொஹோம்ப பேபி, பேர்ல்வைட், லக் பார், சேஃப் ப்ளஸ், பிளக் ஈகிள் பேர்ஃப்யூம் மற்றும் ராணி




திருமதி சூலோதரா சமரசிங்க - பிரதித் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர், அமில உடவத்த - பிரதம நிறைவேற்று அதிகாரி, திருமதி ஏ.எம்.விஜேவர்தன - தலைவி, கவிந்த டயஸ் - அபேயசிங்க - பணிப்பாளர் மற்றும் சமிந்த ஜயசிங்க - சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் - Swadeshi Industrial PLC.

சந்தனத்தின் நறுமணம் தூய்மையின் எதிர்பார்ப்பை வெளிப்படுத்துவதுடன், ஒரு தெய்வீக - சுவர்க்கலோக வாசனையை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு மேலும் அவர்களது பெண்மையை உணரவைக்கிறது.

சந்தனம் தரும் மன அமைதியானது, மனிதனின் ஆன்மீகத்தில் தாக்கத்தை செலுத்துகின்றதென சமீபத்தில் மேற்கத்திய விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கண்டுபிடிப்புகள் ஒன்லைன் சர்வதேச கலைக்களஞ்சியங்களில் கூட விவாதிக்கப்படுகின்றன. இந்த ஆய்வுகள், சந்தனத்தின் மீதான ஆர்வம் தற்போது மேற்கத்தியர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை காண்பிக்கின்றன.

அழகு சோப்புகளின் ராணியான சந்தன எண்ணெயால் செறிவூட்டப்பட்ட ராணி சந்தன சோப், அழகின் 80 ஆண்டுகால உறுதிப்பாட்டைக்கொண்டுள்ளது.

The Swadeshi Industrial Works PLC இனது, ராணி சந்தன சவர்க்காரம், சந்தன அழகு பராமரிப்புப் பொருட்களின் தயாரிப்புப் பிரிவில் சந்தையில் முன்னணியில் உள்ளது.

100% உள்ளூர் நிறுவனமான சுதேசி, தனது தேசத்தைக் கட்டியெழுப்பும் என்பதுடன், இலங்கை சமூகங்களுக்கான அதன் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களையும் (R&D) தொடரும். சுதேசி கொஹோம்ப வர்த்தக நாமமானது, இயற்கை அன்னையை பராமரிப்பதிலும் கலாசார விழுமியங்களை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாது, நிலைபேறானதன்மை தொடர்பான திட்டங்களை செயல்படுத்த அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் விகாரைகளை ஒளியூட்டும் 'சுதேசி கொஹோம்ப ஆலோக பூஜா' நிகழ்வுகள், விகாரைகள் மற்றும் புகையிரத நிலையங்களுக்கான கை கழுவும் தொகுதிகள் மற்றும் சுதேசி ஷவர் ஜெல் ஆகியன சுதேசியின் முன்னணி தரக்குறியீடுகளில் உள்ளடங்குகின்றன.

"இலங்கையின் முன்னணி மூலிகை தனிநபர் பராமரிப்பு தயாரிப்புகள் உற்பத்தி நிறுவனம் எனும் வகையில் சுதேசி அதன் அனைத்து தயாரிப்புகளிலும் பயன்படுத்தப்படும் மூலிகைப் பொருட்களின் செயற்பாட்டு நன்மைகள் தொடர்பில் நுகர்வோர் மேலும் அறிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறது. நாங்கள் இலங்கையின் சிறந்த மூலிகைகளை மட்டுமே பயன்படுத்துகிறோம் என்பதுடன், பயன்படுத்தப்படும் அனைத்து மூலப்பொருட்களும் விரிவாக ஆய்வுக்குள்ளாக்கப்படுகின்றன. தயாரிப்புகளின் தரத்தை உறுதிசெய்வதற்காக முழுமையாக சோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன், எமது தயாரிப்புகள் யாவும் 100% சைவத்தை அடிப்படையானது. அவை விலங்குகள் மீது சோதிக்கப்படவில்லை என்பதுடன், விலங்குகளின் கொடுமைகளிலிருந்து விலக்கற்றவை. ராணி சந்தனம் உள்ளிட்ட சுதேசி தயாரிப்புகள் யாவும் இங்கிலாந்தின் Vegetarian Society, UK யினது அங்கீகாரம் பெற்றவை." இந்த உறுதிமொழியானது நிறுவனத்தின் முன்னோக்கு - சிந்தனை நடைமுறைகளுக்கும், நுகர்வோருக்கு நெறிமுறை ரீதியானதும் சூழல் நட்ரீதியானதுமான தெரிவுகளை மேற்கொள்ள உதவும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

நிறுவனம் எப்போதும் தனது தயாரிப்புகளின் ஆரோக்கியம் மற்றும் சூழல் தாக்கத்தை கருத்திற்கொண்டு, தொடர்ந்தும் அவற்றிற்கு முன்னுரிமையளிக்கின்றது. உண்மையான இலங்கை நிறுவனமான சுதேஷி, அண்மையில், எந்தவொரு நிறுவனமும் பெறாத கொவிட்-19 பாதுகாப்பு முகாமைத்துவ சான்றிதழை பெற்றதுடன், இவ்வாறான தொழில்துறையில் முதன்முதலாக தனது பெயரில் பெற்ற பல்வேறு உரிமை கோரல்களுக்கு உரித்துடையதாகத் திகழ்கின்றது.



# அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் எழுச்சிக்கு தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு




(யாழ். நிருபர்)

அரசாங்கத்திற்கு எதிரான பொதுமக்களின் அதிருப்தி தீவிரமடைவதால் இந்த அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் எழுச்சிக்கு தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது – என அக்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின்கீழ் பொதுக்கொள்கையுடன் செயற்பட எந்தக் கட்சியும் முன்வரலாம். மேலும் தற்போதைய ஜனாதிபதி போராட்ட அரசியலையே மேற்கொண்டு வருகிறார். நான் பௌத்தனாகவுள்ளேன். ஆனால், மத வேறுபாடு இனவேறுபாடு காட்டாமல் எல்லோரையும் இலங்கையர்களாகவே பார்க்கவேண்டும். இதனையே ஜனாதிபதியும் செய்யவேண்டும்.

நமது ஆட்சியில் வீட்டுத் திட்டங்களை வழங்கியிருந்தோம். ஆனாலும் கூட தற்போது வந்த அரசாங்கம் அந்த வீட்டுத் திட்டங்களுக்கான நிதிகளை வழங்காமல் மக்களிடம் விளையாட்டுகளைக் காட்டி வருகின்றது.

வடக்கு, கிழக்கு சார்ந்த பகுதிகளில் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக நாங்கள் வந்திருக்கின்றோம். அந்த வகையில் இன்று நாம் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களை சந்திக்கின்றோம். இது மிகவும் மகிழ்ச்சியானது. ஆனால், தற்போது நாட்டில் ஊடகத்துறைக்கு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

ஆளும் தரப்பின் அமைச்சர்கள் தற்போது நீக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு வெளியே விடப்படும் அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் மாற்று சக்தியாக உருவாகுவதற்கு சாத்தியமில்லை.

மைத்திரிபால சிறிசேன தற்போதுவரை பொதுஜன பெரமுனவில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற நபர். அவ்வாறான ஒருவர் எதிர்த்தரப்பின் பொது வேட்பாளராக வருவதற்கு சாத்தியமில்லை.

2023 நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படும். ஆயினும், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இல்லாத பொது வேட்பாளரை நிறுத்தும் ஆதரிக்கும் எண்ணம் கட்சிக்கு இல்லை. அரசாங்கத்திற்கு எதிரான பொதுமக்களின் அதிருப்தி தீவிரமடைவதால் இந்த அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் எழுச்சிக்கு தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது - என்றார்.

# கண்டாவளையில் பாலத்துடன் மோதுண்டு ஒருவர் பலி!



கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள வெளிகண்டல் பாலத்துடன் மோதுண்டு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார்சைக்கிளில் பயணித்த ஒருவரே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் இவ்வாறு பலியாகியுள்ளார்.

தருமபுரத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் அதிக வேகத்துடன் பயணித்துள்ள நிலையில், வேகக் கட்டுப்பாட்டையிழந்து குறித்த பாலத்துடன் மோதுண்டுள்ளது.

மோட்டார்சைக்கிளை செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் ரவிந்திரன் எனும் 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வலிகாமம் பிரதேச சபை செயலாளரை மிரட்டியவரை கைதுசெய்யக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம் – வலிகாமம் கிழக்கு பிரதேச சபை முன்றலில் பிரதேச சபை செயலாளரை அச்சுறுத்தியவரை கைதுசெய்யக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட அக்கரை பகுதியில் சட்டவிரோதமாக மதில் அமைக்கப்படுவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் பார்வையிட செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவ்விடத்திற்கு சென்றுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரே காணி வாங்கி, அனுமதி பெறாமல் மதில் கட்டினார். மின்சார கம்பத்தையும் தனது காணிக்குள் வைத்து மதில் கட்டியதாக முறையிடப்பட்டிருந்தது.

பிரதேச சபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தர் அங்கு சென்றபோது, மதில் கட்டிய வெளிநாட்டவர் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளார். செயலாளரை அச்சுறுத்தி, அவரது கைத்தொலைபேசியை பறித்து சேதமாக்கியிருந்தார்.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. எனினும், பொலிஸார் உரிய நடவடிக்கையெடுக்கவில்லை, அச்சுறுத்தல் விடுத்தவர் கைதுசெய்யப்படவில்லையென தெரிவித்து ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நேற்று நண்பகல் பொலிஸார் இந்த அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியா வைத்தியசாலையினூடாக வீட்டுமட்ட நோயாளர் சேவை



(வவுனியா நிருபர்)

வவுனியா வைத்தியசாலையினூடாக வீட்டுமட்ட நோயாளர் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. ராகுலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாண ஆளுநரின் சிந்தனைக்கமைய மாகாண சுகாதார அமைச்சின் செயற்றிட்டத்தின் ஊடாக வீட்டு மட்டத்திலான நோயாளர் சேவை வவுனியா வைத்தியசாலையிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் தைப்பொங்கலிலிருந்து குறித்த செயற்றிட்டத்தினை வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பிக்க வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ள நிலையில், குறித்த வீட்டு மட்டத்திலான நோயாளர் சேவையினூடாக நீண்டகால நோய்த் தொற்றுக்குள்ளானவர்கள், நோய்த் தாக்கத்தினால் படுக்கையில் உள்ளவர்கள், விசேட தேவைக்குரியவர்கள், வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறுவதில் கடும் சிரமத்தை எதிர்கொள்பவர்கள் பயனை பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நோயாளர்களுக்கு வீடுகளுக்கு வந்து வவுனியா வைத்தியசாலை மருத்துவக் குழுவால் சிகிச்சை வழங்கப்படவுள்ள நிலையில், குறித்த திட்டத்தினூடாக அவசர நோயாளர்களுக்கான சிகிச்சை வழங்கப்படாது என்பதனை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதுடன், அவர்கள் வவுனியா வைத்தியசாலையையே நாட வேண்டும்.

இதேவேளை, குறித்த திட்டத்திற்காக விசேட தொலைபேசி இலக்கம் விரைவில் ஊடகங்களூடாக வழங்கப்படவுள்ளதுடன், தொலைபேசிக்கு வரும் அழைப்புகளின் ஒழுங்கிலேயே நோயாளர்களுக்கான சேவையும் மேற்கொள்ளப்படும் – என்றார்.

# யாழ். பல்கலையில் இளங்கலை மாணவர் ஆய்வரங்கு ஆரம்பம்







(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வின் திறவுரைகளை (Keynote Speeches) அமெரிக்காவின் ஸலிபெரி பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன், கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி சாந்தி செகராஜசிங்கம், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவரும் தகைசார் பேராசிரியருமான பேராசிரியர் வ.மகேஸ்வரன் மற்றும் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் ஆகியோர் நிகழ்த்தினர்.

மாலை அமர்வில் பன்னிரு ஆய்வுத் தடங்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்படவுள்ளன. இவ்வாய்வுத் தடங்களுக்குத் துறைசார் பேராசிரியர்கள் தலைமை தாங்கவுள்ளனர்.

"சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞானம்" எனும் தொனிப் பொருளுடன் முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய சுமார் 100 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# வன்னி பள்ளிவாசல்களுக்கு சஜித் விஜயம்;

## ரிஷாட், புத்திக்க பத்திரன ஆகியோரும் உடனிருந்தனர்







கடந்த வாரம் 07, 08ஆம் திகதிகளில் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வவுனியா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் மன்னார், தாராபுரம் ஹுசைனியா ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியவற்றுக்குச் சென்று, அங்கு நடைபெற்ற விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுகளில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர்.

# வவுனியா பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியாக ஜயக்கொடி பதவியேற்பு





(வவுனியா நிருபர்)

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கான புதிய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியாக ஜயக்கொடி நேற்று (10) காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பீ.பீ.மானாவடு கடந்த 5ஆம் திகதி கொஸ்வத்தை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இறம்புக்கனை பொலிஸ் நிலையத்தில் உதவிப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய ஐ.ஏ.ஏ. எஸ்.ஜயக்கொடி வவுனியா பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்றுக் காலை சமய வழிபாடுகளைத் தொடர்ந்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கான புதிய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை சுபநேரத்தில் உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார்.

# வாள்வெட்டு தொடர்பில் இளைஞரொருவர் கைது

(யாழ். நிருபர்)

கோப்பாய் மற்றும் கொக்குவிலில் இரு வேறு வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 26 வயதுடைய கொலின் என்ற சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டார் என்றும் அவரிடமிருந்து கூரிய ஆயுதமொன்று கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

கடந்த நவம்பர் 23ஆம் திகதி கோப்பாய், கொக்குவில் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த வாள்வெட்டு வன்முறைக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டு தப்பித்தது. சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவரும் நிலையில், மானிப்பாய் புதுமடத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக நீதிமன்றங்களில் பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48ஆவது நினைவு தினம் யாழில் அனுஷ்டிப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48ஆவது நினைவு தினம் நேற்றுக் காலை 10 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நடத்தப்பட்டது.

இதன்போது அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் விருந்துபசார வைபவத்தின்போது வன்முறைக் கும்பலொன்றினால் நடத்தப்பட்ட தாக்குதலில் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சிறுமியர்களின் வரவேற்பு நடனம் தொடர்பில் சஜித் அறிந்திருக்கவில்லை

## எதிர்க்கட்சி ஊடகப்பிரிவு அறிக்கை



வவுனியாவில் வரவேற்பு நடனமாட அழைத்து வரப்பட்ட இரு சிறுமிகளின் நடனத்தை அரங்கேற்ற முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பொதுமக்கள் மண்டபத்தை விட்டு வெளியேறிய சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், குறித்த நிகழ்வில் சிறுமிகளைக் கொண்ட கலையம்ச அரங்கேற்றம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிந்திருக்கவில்லை என எதிர்க் கட்சித் தலைவரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச இந் நாட்களில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல சமூகநலத் திட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்.

அதன் ஓர் அங்கமாக வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற அரசியல் கூட்டம் ஒன்றிலும் கலந்துகொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வில் சிறுமிகளைக் கொண்ட கலையம்ச அரங்கேற்றம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையை எதிர்க்கட்சித் தலைவர் அறிந்திருக்கவில்லை. குறித்த நிகழ்விற்கு பொறுப்பானவர்களும் பிரதான ஏற்பாட்டாளர்களும் ஏலவே குறிப்பிட்ட கலையம்ச அரங்கேற்றம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர், நிகழ்விற்கு முன்னதாகவே அல்லது நிகழ்வின் போதேனும் அறிவித்திருக் கவில்லை.

மேற்படி கலையம்ச நடன அரங்கேற்றம் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை. மேற்படி நிகழ்வுகள் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவை அல்ல. அத்தோடு முற்றாக மாவட்ட மட்ட மற்றும் தொகுதி மட்ட அமைப்பாளர்களாலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் குறித்த சம்பவத்தை அறிந்ததும், சகல ஒருங்கிணைப்பாளர்களும் வவுனியா மாவட்ட மற்றும் தொகுதி மட்ட அமைப்பாளர்களுக்கு இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடாத வண்ணம் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு கலையம்ச அரங்கேற்றம் இடம்பெறுவதாக ஏலவே அறிந்திருப்பின் அதனை வரவேற்பதோடு குறித்த சிறுமிகளை பாராட்டியும் அவர்களுக்குரிய கௌரவத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் வழங்கியிருப்பார். எதிர்க்கட்சித் தலைவருக்கு முற்றாக அறிவிக்கப்படாத ஒரு விடயமாகும்.

மனிதாபிமான மிக்க, மக்கள்சார் எதிர்க்கட்சித் தலைவர் என்பதும், எதிர்க்கட்சியில் இருந்த போதிலும் குறுகிய காலத்தில் பல்வேறு மனிதாபிமான செயற்பாடுகளில் பாகுபாடற்ற விதமாக செயற்பட்டு வருகிறார் என்றும் மேலும் தெரிவித்துள்ளது.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் தலைமையும் நானே!

## இலஞ்சம் பெற்றதாக நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயாரென ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் உறுப்புரிமை இருப்பதாக சிலர் வருகின்றனர். ஆனால் இவர்கள் ஒருவரிடமும் உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கிடையாது. இவர்கள் வியாபாரிகள். எனவே கட்சியின் தலைவரே நான் தான்; தலைமையும் நான் தான் என தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் செயலாளர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் ஒருபகுதியினர், தாங்கள்தான் கட்சித் தலைமை என அறிவித்துள்ளமை தொடர்பாக கட்சியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரியை நேற்று திங்கட்கிழமை (10) தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் ஆரம்பகால உறுப்பினருடன் தீர்மானம் எடுக்கும் உறுப்பினர் ஆகிய நான் தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் தொடங்கிய கடைசிதான் இந்தக் கட்சி. இந்தக் கட்சியின் அருமை பற்றி இவர்களுக்குத் தெரியாது.

மூக்கைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாது. நாட்டின் வரலாறு தெரியாது தாங்கள்தான் ஹீரோ என நினைத்து கொண்டிருக்கின்றனர். உண்மையில் சம்பந்தன் இந்தக் கட்சியை திட்டம் போட்டு குலைத்தபோது எவ்வளவோ அவமானங்கள், உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கஷ்டப்பட்டு இந்தக் கட்சியை வளர்த்து கொண்டு வருகின்றேன்.



கடந்த 14 வருடத்துக்கு முன்னர் லண்டனுக்கு சென்ற அரவிந்தன் கட்சியின் பெயரை சொல்லி பணம் சேர்த்தவர். எங்கள் கட்சிக்கோ எனது கையிலேயோ ஒரு ரூபா பணம் கூட தரவில்லை. ஆனால் கட்சிக்கு குறிப்பிட்ட 3 பேர் 5 இலட்சம் ரூபா பணம் வழங்கியுள்ளனர்.

சம்பந்தன், சேனாதிராஜா ஆகியோர் கட்சியை குலைத்துச் சென்றார்களே, அப்போதே கட்சியின் ஆயுட்கால உறுப்பினர் பதவியும் இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் கூட்டத்திற்கு வந்தவர்கள் ஒரு சதம் கூட கட்சிக்கு தரவில்லை. இவர்கள் வியாபாரிகள். இவர்களை விடமுடியாது நான் கட்சியை வியாபாரம் செய்யவில்லை.

நான் ஒரு செம்பு காசுகூட இலஞ்சம் வாங்கியது கிடையாது. எனக்கு ஒரு கோடி ரூபா பணம் வந்தது. அத்துடன் கிடந்த சிறிய காணி ஒன்றையும் 32 இலட்சத்துக்கு விற்று எனது பணத்தையும் போட்டு யாழ்ப்பாணத்தில் 10 மில்லியன் ரூபாவிற்கு கட்சிக்கு மாடிக் கட்டிடம் ஒன்றை வாங்கினேன். அவர்களுக்கு அதில் ஒரு கண்.

கடந்த தேர்தல் காலத்தில் லண்டனில் சொகுசாக வாழ்ந்துவிட்டு எங்கள் கட்சி காணியை ஈடுவைத்து தேர்தலில் போட்டியிட தருமாறு கேட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் இவர்கள்.

பழம்பெரும் தலைவர்கள் தமது உயிரை பணயம் வைத்து செயற்பட்டுவந்த பாரம்பரிய கட்சியினை 50 வருடமாக கட்டிக் காப்பாற்றி வருகின்றேன். லண்டனில் இருந்து வந்து மட்டக்களப்பில் இருந்து 5 பேருடன் வந்து கட்சியை எடுத்துப்போகலாம் என நினைக்கிறார்கள்.

கட்சியினுடைய விதிப்படி 3 மாதத்தில் கட்டணம் கட்டாவிட்டால் உறுப்பினர் பதவி பறிபோய்விடும். ஆனால், இவர்களுக்கு உறுப்புரிமை இருந்தால்தானே உறுப்புரிமை பறிபோவதற்கு? இவர்கள் உறுப்புரிமை இருப்பதாக வருகின்றனர். ஆனால், இவர்கள் ஒருவரிடமும் உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கிடையாது. பொய் சொன்னேன், களவு எடுத்தேன் என யாராவது நேர்மையான 10 பேர் வந்து நிரூபித்தால் நான் செய்தது குற்றம் என்றால் நான் கட்சியை விட்டுவிட்டுப் போகிறேன் என சவால் விடுக்கின்றேன்.

# தைத் திருநாளில் மக்களின் வாழ்வு வளம்பெற்று சுபீட்சமடைய வேண்டும்

(கண்டி)





தைப்பிறந்தால் வழி பிறக்கும் என்பதே எம் நம்பிக்கை. எல்லா நல்ல விடயங்களுக்குமான முதல் அத்திவாரம் மிகப் பெரிய நம்பிக்கையுடன் இறை வழிபாடுகள் கலந்து தைத் திருநாள் அன்றே ஆரம்பிக்கப்படுகின்றது. இனிய இத் தைத் திருநாளுடன் பெருந்தோட்ட உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்தமாக இந்து மக்களின் வாழ்வு வளம்பெற்று சுபீட்சமும் ஒளிமயமானதாகவும் அமைய வேண்டுமென்று இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கத்தின் தலைவர் சத்துர சமரசிங்க, பொதுச்செயலாளர் ரொபட் பிரான்சீஸ் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது, கடந்த வருடம் கொவிட் தொற்று நோய் காரணமாக பல்வேறு கட்டத்தில் நாடு முடக்கப்பட்டிருந்த போதிலும் எமது சங்கத்தின் சேவையின் காரணமாக தோட்ட உத்தியோகத்தர்களின் நன்மை கருதி கடந்த வருடம் மே மாதம் முதல் காப்புறுதித் திட்டத்தை சங்கம் ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் எமது சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு எந்த விதமான கொடுப்பனவுகளுமின்றி நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். தை பிறந்தவுடன் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக் கொள்ள வழியேற்படுமென நம்பிக்கை தெரிவித்தனர்.



ஐயப்ப சுவாமி விரதமாலை அணிந்துள்ள ராகலை எமஸ்ட் தோட்டத்தைச் சேர்ந்த ராமையா அருண்குமார் சுவாமி உடபுசல்லாவையிலிருந்து கொழும்பு, அளுத்மாவத்தை ஸ்ரீஆனந்த ஐயப்பன் தேவாலயத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டார். அவிசாவளை - கொழும்பு வீதி சாலாவவில் அவர் இருமுடி தாங்கிப் பயணிப்பதையும் அருகில் வீ.சுரேஷ்குமார் பாபுஜீ குருசுவாமி மற்றும் ஆர். கபில்குமார் சுவாமி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு : அவிசாவளை செய்தியாளர்)

# 2021இல் மாத்திரம் 369 யானைகள் உயிரிழப்பு

(ஜுட் சமந்த)

நாட்டில் 2020ஆம் ஆண்டை விட 2021ஆம் ஆண்டுக்குள் யானை - மனித மோதல்களினால் யானைகளும் மனிதர்களும் உயிரிழந்துள்ளதாக வனஜீவிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டில் காட்டு யானைகளின் தாக்குதலில் 141 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோன்று 369 யானைகள் உயிரிழந்துள்ளன. இருந்தபோதிலும் 2020ஆம் ஆண்டில் காட்டுயானைகளின் தாக்குதல் காரணமாக 112 பேர் உயிரிழந்துள்ளதுடன் மனித நடவடிக்கைகளின் காரணமாக 327 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

காட்டு யானை கிராமங்களுக்குள் நுழைதல் மற்றும் காட்டு யானைகள் வசிக்கும் இடங்களில் மனித குடியிருப்புகளை அமைத்தல் ஆகிய காரணங்களாலேயே 2020ஆம் ஆண்டை விட 2021ஆம் ஆண்டில் யானை - மனித தாக்குதல்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித நடவடிக்கைகளின் காரணமாகவே காட்டு யானைகளின் உயிரிழப்பு வீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கமைய விலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தப்படும் வெடிபொருட்களை உண்டதால் 68 யானைகளும் மின் வேலியில் சிக்கி 65 யானைகளும் 45 யானைகள் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களினாலும் உடலுக்கு விஷம் சென்றதால் நான்கு யானைகளும் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



தமிழ்நாடு திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா நேற்று (10) காலை திருச்சி ஹோட்டல் செவெனாவில் நடைபெற்றது. இதன்போது, சிறப்பு மலரின் முதல் பிரதியை அரிமா வைத்தியர் அச்சர் சிங் வெளியிட புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொண்டார். நந்தவனம் த.சந்திரசேகரன், அபூபக்கர் சித்திக், சிரேஷ்ட கலைஞர் கே.சந்திரசேகரன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

## ஹஸன் மௌலானா அல் - காதிரியின் அனுதாபச் செய்தி

(மினுவாங்கொடை நிருபர்)



"இலங்கை ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவும், மூத்த உலமாவுமாகிய மௌலவி அல்ஹாஜ் ஜே. அப்துல் ஹமீத்தின் (பஹ்ஜி) மறைவு, இலங்கைவாழ் முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமல்ல, சுன்னத் வல் ஜமா அத் கொள்கைகளின் அடிப்படையில் வாழும் அனைத்து முஸ்லிம்களுக்கும் குறிப்பாக ஷாதுலிய்யா தரீக்காவைச் சேர்ந்த இஹ்வான்களுக்கு என்றுமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்" என சர்வமதத் தலைவர்களில் ஒருவரான அல் - ஹாஜ் அஸ் - ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல் - காதிரி, தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் ஹஸன் மௌலானா மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சங்கைக்குரிய அப்துல் ஹமீத் பஹ்ஜி ஆலிம்மின் மறைவு, எனக்கு மிகவும் கவலையான ஒரு செய்தியாக இருந்தது. கலீபதுல் குலபா அப்துல் ஹமீத் பஹ்ஜி அன்பான பண்பான பெருந்தகை ஆலிமாகத் திகழ்ந்தார். மார்க்கக் கருத்துரைகளில் ஆழமான தெளிவான பழுத்த சிந்தனை மிகுந்த அனுபவங்களைப் பெற்றிருந்தார்.

65 வருட காலம் வாழ்ந்து, 41 வருட காலம் மார்க்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணம் செய்து வாழ்ந்த ஒரு மார்க்கப் பெருந்தகையாக அன்னாரை நோக்கலாம். இன, மத ஒற்றுமைக்காக அன்னார் பயணித்த பாதைகளை, நமது வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது.

இவ்வாறான ஒரு பெருந்தகை மனிதரின் மறுமை வாழ்வுக்காக நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோமாக! வல்ல நாயன் அல்லாஹுத்தஆலா அன்னாரை "ஜன்னதுல் பிர்தௌஸ்" எனும் உயரிய சுவர்க்கத்தில் சேர்த்து வைப்பானாக!!

எம் உயிரிலும் மேலான கண்மணி நபிகள் நாயகம் ஸெய்யிதினா றஹ்மதல் லில் ஆலமீன் மௌலானா முஹம்மதுர் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பக்கத்தில் ஒன்றாக அன்னாரை வாழ வைப்பானாக!!!

# யாழில் இடம்பெற்ற உலக ஹிந்தி தின நிகழ்வு






(யாழ். நிருபர்)

உலக ஹிந்தி தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தூதரக இந்தியா கோர்னரில் ஹிந்தி மொழி கற்கும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதர் ராம் மகேஸ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமூக சேவையை ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்

## இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் வலியுறுத்து

(இக்பால் அலி)

சமூக சேவை என்பது எல்லா பள்ளிவாசல்களிலும் இருக்கவேண்டும். அதனை ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும் - என அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.வை.எம்.ரிஸ்வி முப்தி தெரிவித்தார்.

கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமா, கண்டி நகர் பள்ளிவாசல்கள் சம்மேளனம், கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கம், கண்டி மீராக்காம் பெரிய பள்ளிவாசல் மற்றும் மலே பள்ளிவாசல்கள் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய முன்னாள் கண்டி மாநகர சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம். நுஹ்மானின் சேவைநலன் பாராட்டு விழா கண்டி மீராமக்காம் பெரிய பள்ளிவாசலின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஒரு சமூக செயற்பாட்டாளரின் பெறுமதி மகத்துவமானது. ஓர் அருட்கொடை கையில் இருந்து போன பின்னர்தான் அதன் பொருளின் பெறுமதி தெரியும். என் மகனின் ஜனாஸா விடயத்திலும் நுஹ்மான் காக்காவின் பங்களிப்பு மிகவும் மகத்தான பங்களிப்பைச் செய்தார்.

நபி அவர்கள் (ஸல்) நபித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கஷ்டத்தில் உள்ளவர்களுக்கு சமூகப் பணிகள்தான் செய்தார்கள். திடீர் அபாயங்கள், ஆபத்துகள் வரும்போது அதற்கு உதவியாக இருந்து மனிதாபிமானப் பணிகள் புரிந்துள்ளார்கள். அவர்களுக்கு நபித்துவம் பட்டம் கிடைக்கு முன்னரே அல்-அமீன் என்ற அடையாளத்தைப் பெற்றுக்கொண்டார்கள். கஷ்டமான மக்களிக் எல்லாக் காரியங்களிலும் நபி அவர்கள் பங்கெடுத்துள்ளார்கள். அநாதையாக இருக்கலாம், விதவைகளாக இருக்கலாம். மதம் மார்க்கம் என்பதற்கப்பால் மனிதர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற கோட்பாட்டின்கீழ் நபி நாயகம் அவர்களுடைய காலம் ஒரு சிறப்பம்சமாக காட்சியளித்தது.

சமூக சேவை என்பது எல்லா பள்ளிவாசல்களிலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும். எந்த விசயத்தையும் மார்க்க ரீதியாக பார்ப்பது என்பது எமது கடமையாகும். அந்த வகையில் நபி நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவம் கிடைப்பதற்கு முன்பு இருந்தே சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். மதீனாவில் முதல் மஸ்ஜித் உருவாக்கப்பட்டதற்குப் பிறகும் நபி அவர்கள் இதைதான் அங்கு உருவாக்கினார். மக்களுடைய கஷ்ட நஷ்டங்களுக்கு பங்ளிப்புச் செய்தார்கள்.

இந்த கொவிட் தொற்றுக் காரணமாக ஜனாஸா நல்லடக்கம் விடயத்தில் முழு நாட்டுக்கும் பெரும் பங்களிப்பைச் செய்தவர் அப்சல் மரைக்கார் அவர்கள். அவரும் ஒரு பாரிய பங்களிப்பை செய்த ஒருவர். அவரும் மதிக்கப்படத்தக்க ஒருவர்.


ஒவ்வொரு பள்ளிகளிலும் மார்க்க வழிமுறைகள் எவ்வாறு பின்பற்றப்படுகின்றதோ அதேபோன்று சமூக செயற்பாடுகளிலும் முக்கியத்துவம் பெறுதல் வேண்டும். நுஹ்மான் காக்கா இதற்கு ஒரு காரணமாக இருந்தாலும் ஒவ்வொரு பள்ளிவாசலிலும் சமூகப் பணிகள் இடம்பெற வேண்டும். ஒவ்வொருவரும் திடசங்கற்பத்துடன் செயற்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் அதற்கு உண்டானவர்களை உருவாக்குதல் வேண்டும்.

உண்மையிலேயே நுஹ்மான் காக்கா செய்த சேவை கண்டியைப் பொறுத்தவரையிலும் யாராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. நுஹ்மான் காக்கா ஒரு வீட்டில் ஜனாஸா வீழ்ந்தால் அந்த குடும்பத்தின் உறவினர்களோடு ஒன்றித்து விடுவார்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஜனாஸா அடக்கும் முறைகள் பற்றி காட்டித் தந்துள்ளார்கள். அதில் ஒன்றுதான் ஜனாஸாவைக் குளிப்பாட்டுதல், கபனிடுதல், கபரில் வைப்பது. அதற்கு மண் அள்ளிப் போடுவது. அந்த கபருடைய விடயங்கள் சிறப்பாக உள்ளன. அதிலே ஏராளமான படிப்பினைகள் உள்ளன. அந்தவகையில் ஜனாஸா நல்லடக்கம் விவகாரத்தில் எமது சமூகத்திற்கு மிகப்பெரும் பணியை நுஹ்மான் காக்கா செய்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சீன–இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்கள் கொழும்பில் சந்திப்பு

## இரு நாடுகளுக்கும் இடையிலான சிறப்புவாய்ந்த உறவு குறித்து அமைச்சர் ஜீ.எல். எடுத்துரைப்பு



சீன மக்கள் குடியரசின் அரச அவை உறுப்பினரும், வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ உடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பின்போது, இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான ஆரோக்கியமான மற்றும் சிறப்பு வாய்ந்த நட்புறவு மற்றும் பலதரப்பட்ட பங்காளித்துவத்தை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தனது ஆரம்ப உரையில் எடுத்துரைத்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இறப்பர், அரிசி ஒப்பந்தத்தின் 70ஆவது ஆண்டு நிறைவையும், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 65ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கும் கொண்டாட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் வாங் யீ இலங்கைக்கு சுருக்கமான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

மேலும் கருத்துகளை வெளியிட்ட வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், இலங்கை சிரமங்களை எதிர்கொண்டபோதெல்லாம், சீனாவிடமிருந்து முழு அளவிலான ஆதரவு எப்போதும் கிடைத்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

இந்தச் சூழலில், நன்கொடையாக வழங்கப்பட்ட 3 மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் உள்ளடங்கலாக கொவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய தடுப்பூசித் திட்டத்தில் சீனாவின் தன்னிச்சையான மற்றும் தாராளமான ஆதரவிற்காக வெளிவிவகார அமைச்சர் வாங் யீக்கு அமைச்சர் உண்மையான நன்றிகளையும், ஆழ்ந்த பாராட்டுகளையும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில், இலங்கை மத்திய வங்கிக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய மாற்று வசதியை வழங்குவதன் மூலம் சீனாவின் சரியான நேரத்திலான உதவி, நாட்டின் நாணய இருப்புகளை அதிகரிக்க உதவியதாக அவர் மேலும் குறிப்பிட்டார். இது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நிலையான நட்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இருதரப்புக் கலந்துரையாடலின்போது, தற்போது நடைபெற்றுவரும் தடுப்பூசித் திட்டத்திற்கான மேலதிக ஆதரவு, சீனாவில் இருந்து கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்திற்கு முதலீடுகளை ஈர்த்தல், சீனாவிலிருந்து இலங்கைக்கான சுற்றுலாவை அதிகரித்தல், சீனாவிற்கான இலங்கையின் ஏற்றுமதியை மேம்படுத்துதல் மற்றும் குறிப்பாக இரு நாடுகளுக்கு இடையே பௌத்த உறவுகளை வளர்ப்பதில் கலாசார ஒத்துழைப்பை ஊக்குவித்தல் ஆகியன உள்ளிட்ட இருதரப்பு ஆர்வமுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

வெளிநாட்டு அமைச்சரின் கருத்துகளுக்கு அன்புடன் பிரதிபலித்த சீனாவின் அரச அவை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ, சீனா இலங்கையை காலத்தால் இணைந்த நண்பராகக் கருதுவதாகக் குறிப்பிட்டதுடன், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில் கடந்த ஆண்டு விசேட நினைவு நாணயத்தை வெளியிட்டமைக்காக இலங்கைக்கு நன்றிகளைத் தெரிவித்தார். 1952இல் கைச்சாத்திடப்பட்ட இறப்பர், அரிசி ஒப்பந்தம் இருதரப்பு உறவுகளில் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும் என அவர் பாராட்டினார். பல ஆண்டுகளாக பல்வேறு சர்வதேச அரங்குகளிலான இரு நாடுகளினதும் வலுவான மற்றும் நிலையான ஆதரவையும் அவர் எடுத்துரைத்தார்.

கலந்துரையாடலின் பின்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இரண்டு வெளிநாட்டு அமைச்சர்களினதும் முன்னிலையில் இரு தூதுக்குழுவினரும் பின்வரும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம்.

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கான மானியத்துடன் கூடிய வீட்டுத்திட்டம் தொடர்பான பரிமாற்றக் கடிதம்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் கையளிப்பு சான்றிதழ்.

நடமாடும் சிறுநீரக நோய் கண்டறிதல் அம்புலன்ஸ் வாகனங்களுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் சான்றிதழ்களை ஒப்படைத்தல்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் (பேராசிரியர்) ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும், வர்த்தகப் பிரதி அமைச்சர் கியான் கெமிங், உதவி வெளிவிவகார அமைச்சரான தூதுவர் வு ஜியாங்ஹாவ் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென்ஹோங் ஆகியோரும் முறையே இலங்கை மற்றும் சீனத் தூதுக்குழுக்களில் கலந்துகொண்டனர்.

# மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்க உடனடி நடவடிக்கை அவசியம்

## அரசாங்கத்திடம் தேசிய மீனவர் ஒன்றியம் கோரிக்கை

(ரஸீன் ரஸ்மின்)



மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கு மானியம் வழங்க அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என தேசிய மீனவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் தினேஷ் சுரஞ்சன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தினால் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கற்பிட்டியில் நேற்று இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா தொற்றுப் பரவல், கடும் மழையுடனான வெள்ளம் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் எண்ணெய்க் கசிவு என்பனவற்றின் காரணமாக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மீனவர்கள் ஒரு நாளைக்கு தமது தொழில் தேவைகளுக்காக சுமார் நூறு முதல் 120 லீற்றர் மண்ணெண்ணெய் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், திடீர் எரிபொருள் விலையேற்றம் எமது மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீனவர்கள் கடன்களைப் பெற்று மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் தமது தொழிலை செய்து வருகின்றனர்.

எனினும், இந்த மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பு காரணமாக மீனவர்கள் மற்றும் மீனவ ஏற்றுமதியாளர்கள் என மீனவத் தொழிலில் ஈடுபடுகின்ற அனைவரும் மேலும் கடனாளிகளாக மாறும் நிலை காணப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி மீன்பிடி உபகரணங்களும் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யாமல் என்றுமில்லாதவாறு பாரிய அளவில் விலை அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது.

எனவே, மண்ணெண்ணெய், ஒயில் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பனவற்றின் விலைகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும்

அத்துடன், மீனவர்களுக்கு எரிபொருள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றுக்கு மானியங்களையும், விசேட சலுகைகளையும் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் அவசரமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் - என்றார்.

# பஸ்கள் மீது இளநீர் தாக்குதல்; சந்தேகநபர்களைத் தேடி வலைவீச்சு!

(ஜூட் சமந்த)



புத்தளத்தில் பஸ்கள் மீது இளநீரால் தாக்குதல் நடத்திய சந்தேகநபர்களைத் தேடி விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக ஆராச்சிகட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில் வந்த அடையாளந் தெரியாத நபர்கள் ஆராச்சிகட்டுவ, ஹேன் கட்டிய பகுதியில் கடந்த சனிக்கிழமை இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

புல்மோட்டையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீதும் மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இளநீர் பலவற்றைக்கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆராச்சிகட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

# பேருவளை பிரதேசத்தில் இளைஞர் மத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்கள்



இளைஞர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் பேருவளை பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளைப் பெற்று கடந்த 2020ஆம் ஆண்டு வெற்றியீட்டிய அஹ்மத் சாதிக், தற்போது 5ஆவது இளைஞர் நாடாளுமன்றத்தில் வெளிவிவகாரம் மற்றும் ராஜதந்திர உறவுகள் அமைச்சின் பிரதியமைச்சராக செயற்பட்டு வருகிறார்.

பேருவளை பிரதேசத்தில் இளைஞர்கள் மத்தியில் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்கில் "பிரதான நான்கு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்" என்ற தொனிப்பொருளில் ஒரு செயற்றிட்டத்தை செயற்படுத்தி வருகின்றார்.

அந்தவகையில் பேருவளை பிரதேசத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் துறைசார் ஆசிரியர்களை சந்தித்து இச்செயற்றிட்டம் சம்பந்தமான விளக்கங்களை வழங்கியுள்ளதுடன், பாடசாலைகளின் மேலதிக தேவைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பாடசாலையை மையப்படுத்திய செயற்பாடுகளை நடைமுறைப் படுத்த பிரதானமான 4 திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். பாடசாலைகளில் இந்த நான்கு திட்டங்களுக்கும் வரவேற்பு இருந்ததுடன், எதிர்காலங்களில் இத்தகைய முயற்சிகளை செய்ய பாடசாலை நிர்வாகம் உதவும் எனவும் கூறியுள்ளனர்.

பிரதான நான்கு திட்டங்கள்

1. இளைஞர் நாடாளுமன்றம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பற்றிய அறிமுகமும் விளக்கமும்.

2. இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் பற்றிய அறிமுகமும் விளக்கமும் அத்தோடு ஒவ்வொரு பாடசாலைகளுக்குமான இளைஞர் கழகங்களை உத்தியோகபூர்வமாக உருவாக்குதல்.

3. ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை நாடாளுமன்ற அறிமுகமும் உருவாக்கமும்.

4. களுத்துறை மாவட்ட மாதிரி ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கம்.( KALUTARA MODEL UNITED NATIONS)

இவ்வாறான செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு இளைஞர்களுக்கான எதிர்கால வேலைத்திட்டங்கள் நடைபெறுகிறது என்றும் குறிப்பிட்டார். எனவே, பாடசாலையின் நிர்வாகம் இது தொடர்பான விடயங்களை கலந்துரையாடி இத்திட்டத்தின் பலனையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

# மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஹட்டபிட்டிய காலமானார்



முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கித்சிறி கஹட்டபிட்டிய நேற்று காலமானார்.

அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கித்சிறி கஹட்டபிட்டிய மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் சில காலம் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேர் கைது

(எம்.கிருஸ்ணா)

பொகவந்தலாவ செல்வகந்தை பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுவந்த ஆறு பேரை பொகவந்தலாவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்

பொகவந்தலாவ பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் (09) இரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை பொவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சகல மக்களையும் சமமாக மதிக்கும் முறைக்கு நாட்டை கொண்டுசெல்வதே இலக்கு

## திருநகரில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு





சகல மக்களையும் சமமாக மதிக்கும் முறைக்கு நாட்டை கொண்டுசெல்ல ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் மத்தியில் நாட்டிலும், வடக்கிலும் வசந்தம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், வடக்கின் அபிவிருத்தி சரிந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

திருநகரில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்களைப் பிரிவினைப்படுத்தி தாம் அரியாசனம் ஏறியதையே இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. நாட்டு மக்களிடம் வரிசை கட்டும் காலத்தை அரசாங்கம் மீண்டும் கொண்டுவந்துள்ளது.

நாட்டை படுகுழியில் இருந்து மீட்டெடுக்கும் திறன் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உண்டு. திறமையும், ஆற்றலும் இயலுமையும் கொண்ட திறமையான அணி என்னிடம் உள்ளது.

மக்கள் சுய கௌரவத்துடன் வாழக்கூடிய சுதந்திரம் கொண்ட சகாப்தமாகவும், ஜனநாயகம் அரசாட்சியாக விளங்கும் சகாப்தமாகவும் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்தார்.









இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலைமகளின் தெய்வீக கிராமிய நிகழ்வு மாத்தளை கந்தேநுவர தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா கலந்துகொண்டார். மேலும், மாத்தளை இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கீதா கோபிநாத், இரத்தோட்ட பிரதேச சபை உப தலைவர் ஏ. ஆனந்தகுமார், மாத்தளை, கந்தேநுவர தமிழ் வித்தியாலய அதிபர் ஜே. நந்தரூபன், அருட்சொல் செம்மணி சைவ புலவர் ஜீவன் பிரசான், நித்திய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ இரமேஷ் குமார் சர்மா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதையும் பிரதம அதிதி மரநடுகையில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

# திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகளை இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.ம.சக்தி போராட்டம்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தலைமையில் முன்னெடுப்பு






(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகளை இந்தியாவிற்கு வழங்குவதை எதிர்த்து நேற்று (10) திருகோணமலை சீனக்குடா பெற்றோலிய கூட்டுத்தாபனம் முன்னாள் எதிர்ப்புப் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏற்பாடுசெய்தனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஐக்கிய மக்கள் கட்சியின் உறுப்பினர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டார்கள்.

இலங்கையை இந்தியாவுக்கு விற்று விடாதே, மற்றும் காணிகளை மீளப்பெறு போன்ற வாசகங்களையும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பௌத்த தேரர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டார்கள்.

## போடியார் புலம்பல்!



**உள்ளூராட்சி மன்றங்கள ஒருவருடத்துக்கு நீடிக்கப்போறாங்களாம்.. எத்தன வருசம் நீடித்தாலும் எங்கட சனத்துக்கு ஒண்டுமே ஆகப்போவதில்ல அவங்கட வகுறுதான் நிரம்பும் நமக்கு பட்டினியும் பஞ்சமும்தான் தொடரும்**

# நல்லாட்சிக் காலத்தில் நாட்டின் வளங்கள் விற்கப்படுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் எங்கே?

## ஜனசெத பெரமுன கட்சித் தலைவர் சீலரத்ன ஹிமி கேள்வி



(பதுர்தீன் சியானா)

நல்லாட்சி அரசாங்கம் இருக்கின்றபோது நாட்டின் வளங்களை விற்பனைசெய்வதாக குற்றங்களை சுமத்தி ஆட்சிக்கு வந்தவர்கள் எங்கே? என ஜனசெத பெரமுன கட்சித் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன ஹிமி கேள்வியெழுப்பியுள்ளார்.

திருகோணமலை சீனக்குடா பகுதியில் அமைந்துள்ள எண்ணெய்த்தாங்கியை பார்வையிடுவதற்காக சென்றபோது பிக்குவை ஊழியர்கள் மறைத்து பிரதான கதவை மூடி அங்கு செல்லவிடாது தடுத்ததையும் அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்து அவர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

எங்கள் நாட்டின் எண்ணெய் வளங்களை மற்றும் எண்ணெய்த்தாங்கிகளை பாதுகாக்க முடியாத அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகின்றேன். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது இந்தியாவிற்கு விற்பனைசெய்யப்பட்டதாக கூறப்படும் எண்ணெய்த்தாங்கி எங்கே?, நல்லாட்சி அரசாங்கம் இருக்கின்றபோது நாட்டின் வளங்களை விற்பனைசெய்வதாக குற்றங்களை சுமத்தி ஆட்சிக்கு வந்தவர்கள் எங்கே? எனவும் ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன ஹிமி கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவங்ச அரசாங்கத்தை விமர்சித்து மக்களின் வாக்குகளைப் பெற முயற்சிக்கிறார்கள். இனி அந்தத் தீர்மானம் முடிந்துபோய்விட்டது.

நாட்டில் முட்டாள்கள் இல்லை எனவும் மக்கள் இனிவரும் காலங்களில் சிறந்த பாடத்தை புகட்டுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தின் எல்லைக்கு வேலியிடும் பணிகள் ஆரம்பிப்பு

(திகாமடுல்ல நிருபர்)

சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நிலவிய எல்லைப் பிரச்சினையானது நீண்டகால இழுபறிக்குப் பின்னர் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கமைய தீர்வை எட்டியிருந்த நிலையில், பிரதேச செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட குறித்த எல்லைக்கு வேலியிடும் பணிகளுக்குத் தேவையான நிதியின்மையால் வேலியிடும் பணிகள் கால தாமதமாகியிருந்தன.

இந்நிலையில், அதற்கான நிதியானது முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், தற்போதைய சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமாகிய ஐ.எல்.எம்.மாஹிரின் முயற்சியினால் சம்மாந்துறை விளையாட்டு சம்மேளத்தினருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டு தற்போது வேலியிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சம்மாந்துறை பொது மைதானத்தில் விளையாடும் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து வரும் விளையாட்டு வீரர்கள் தங்களது மலசலகூடத் தேவைகளுக்காக பொது மைதானத்திற்கென ஒரு மலசலகூடமின்றி பல காலமாக சிரமப்பட்டுவந்த நிலையில் சம்மாந்துறை விளையாட்டு சம்மேளத்தினரின் முயற்சியினால் ஐ.எல்.எம்.மாஹிர் ஒத்துழைப்பினால் தற்போது விளையாட்டு மைதானத்திற்கென பொது மலசலகூடமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.



சம்மாந்துறை பொது மைதானத்தின் எல்லை வேலியிடும் பணி மற்றும் மலசலகூட நிர்மாணப் பணிகளுக்கான நிதி உதவியினை சம்மாந்துறை விளையாட்டு சம்மேளத்தினர் ஐ.எல்.எம்.மாஹிரிடம் கோரியமைக்கமைவாக மாஹிரினால் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிதி வழங்கப்பட்டது.

சம்மாந்துறை பொது மைதானத்தில் நிலவிய பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் பல அரசியல்வாதிகளிடம் முறையிட்டும், பல அரசியல்வாதிகள் குறித்த மைதானத்தில் இடம்பெற்ற பல விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றியிருந்தும்கூட அவர்களினால் பொது மைதானத்தின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்த நிலையில், சம்மாந்துறை விளையாட்டு சம்மேளத்தினரின் முயற்சியினால் தற்போது ஐ.எல்.எம்.மாஹிரின் ஒத்துழைப்போடு குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# காரைதீவில் பல்நோக்கு கூட்டுறவுச் சங்க பல்பொருள் விற்பனை நிலையம் திறப்பு






(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டிடத்தில் புதிய பல்பொருள் விற்பனை நிலையமொன்று காரைதீவு பல்நோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத் தலைவர் யோ.கோபிகாந்தின் தலைமையில் நேற்று (10) திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பல்நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தை திறந்துவைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டனர்.

மேலும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள பிராந்திய அதிகாரிகள், அம்பாறை மாவட்ட ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பல்நோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், ஊர்ப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருமலை பிரதேச வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிதாக்கி வழங்கிவைப்பு

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துக்கோரலவினால் நேற்று முன்தினம் (09) ஒட்சிசன் செறிதாக்கி வழங்கப்பட்டது.

இவை வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி லசித் திலகரத்னவிடம் கையளிக்கப்பட்டன.

மொரவெவ பிரதேச சபை தவிசாளர் ஜகத் குமார வேரகொடவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மின்சாரம் தடைப்படும் பட்சத்தில் வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் நோயாளர்கள் இருட்டில் இருப்பதாகவும் மிக விரைவில் ஜெனரேட்டர் ஒன்றினை பெற்றுத்தருமாறும் ஊழியர்கள் கோரிக்கை விடுத்தபோது மிக விரைவில் ஜெனரேட்டரை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.




# குச்சவெளி பிரதேச சபையினால் விசேட டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள்

(கிண்ணியா நிருபர்)

தேசிய டெங்கு வாரத்தை முன்னிட்டு குச்சவெளி பிரதேச சபையினால் நேற்றும் இன்றும் குச்சவெளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் விசேட டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் இடம்பெற்றன.




அதற்கமைய குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட புல்மோட்டை பகுதியில் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கின் தலைமையில் விசேட டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் நேரடியாக களத்தில்நின்று செயற்பட்டதுடன் புல்மோட்டை உப அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

அதற்கமைய குறித்த நிகழ்ச்சித்திட்டம் நாளைய தினமும் ஒவ்வொரு பிரதேசங்களில் இடம்பெறவுள்ளதால் பொதுமக்கள் தங்களது குடியிருப்பு வீடுகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு முன்னால் உள்ள குப்பைகள், வடிகான்களை துப்புரவுசெய்து டெங்கு நுளம்பு பரவும் நிலைமையினை குறைப்பதற்கு ஒத்துழைப்பை வழங்குமாறு தவிசாளர் அன்பாய் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன், தங்களின் பகுதியிலுள்ள வட்டார உறுப்பினர்களின் ஒத்துழைப்புகளையும் பெற்று டெங்கு வாரத்தை நடைமுறைப்படுத்துமாறும் தவிசாளர் மேலும் கேட்டுக்கொள்கின்றார்.

# திருமலை நகராட்சி மன்றத்தின் தொழிலாளர்கள் கௌரவிப்பு





(கிண்ணியா நிருபர்)

கொவிட் -19 தொற்று உக்கிரமாக இருந்த காலப்பகுதியில் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற திருகோணமலை நகராட்சி மன்றத்தின் சுகாதார தொழிலாளர்கள் 05 பேருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று (10) காலை நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது நகராட்சி மன்ற உறுப்பினர் வடமலை ராஜ்குமார் அதிதியாக கலந்துகொண்டிருந்தார். தொழிலாளர்கள் நலன் சார்ந்த விடயங்களில் அதிக அக்கறையுடன் செயற்படும் உறுப்பினர் என்ற அடிப்படையில் உறுப்பினர் வடமலை ராஜ்குமார் பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.சுந்தரமூர்த்தி, செயலாளர் வெ.கிருஸ்ணமூர்த்தி, பொருளாளர் ச.விஜயவிஸ்வம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்போது உரையாற்றிய உறுப்பினர் வடமலை ராஜ்குமார், கொவிட் தொற்று காலப்பகுதியில் அனைவரும் பயந்து வீடுகளில் இருந்தபோது துணிந்து திருகோணமலை நகரத்தினை சுகாதாரமாக வைத்திருந்து நோய்த்தொற்றிலிருந்து நகரம் விடுபட சுகாதாரத் துறையுடன் இணைந்து பாடுபட்டவர்கள் சுகாதார தொழிலாளர்கள். இதை எமது நகர மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு அங்கிகளை தற்போதைய சபையால் மிக நேர்த்தியாக வழங்கப்படுகின்றது. எனவே தொழிலாளர்கள் உங்களுடை பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு தங்களது கடமையை மேற்கொள்ளவேண்டும்.

மேலும் உங்களுடைய உரிமை சார்ந்த விடயத்தில் ஏதேனும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தால் அதனை உடனடியாக தெரியப்படுத்தவும் அவற்றை தீர்ப்பதற்காகவே தலைவர் அவர்களும் 24 உறுப்பினர்களும் உங்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ளோம் என தனது உரையில் திருகோணமலை நகராட்சி மன்றத்தின் உறுப்பினர் வடமலை ராஜ்குமார் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹெலி மட்டக்களப்பு விஜயம்



அரசாங்க அதிபரை சந்தித்து டச்சுக் கோட்டையினையும் பார்வையிட்டார்








(மட்டக்களப்பு நிருபர்)

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹெலி மட்டக்களப்பின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான விடயங்களை கேட்டறிய மாவட்ட செயலகத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கும் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று (10) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உயர்ஸ்தானிகர் டேவிட் ஹெலி மாவட்டத்தின் சுற்றுலாத்துறை தொடர்பான அபிவிருத்தி விடயங்களை அரசாங்க அதிபர் கருணாகரனிடம் கேட்டறிந்ததுடன் புராதன சுற்றுலாத் தலமாகிய டச்சுக் கோட்டையினையும் பார்வையிட்டார்.

டச்சுக் கோட்டையின் 400ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு, திறன் உள்ளடங்கிய அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் S4IG நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விசேட நூல் மற்றும் மட்டக்களப்பு டச்சுக் கோட்டையின் அபிவிருத்தி எனும் நூலும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹெலியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

இதுதவிர, மட்டக்களப்பில் அமைக்கப்பட்டு வரும் பொதுநூலகத்தின் மேல் தளத்தில் இலத்திரனியல் வாசிகசாலை ஒன்றை அமைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு அரசாங்க அதிபர் கருணாகரன் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இச்சந்திப்பின்போது மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் உள்ளிட்ட மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், S4IG நிறுவனத்தின் முகாமையாளர் எஸ்.மரீனா, S4IG நிறுவனத்தின் பிரதி குழுத் தலைவர் சுமலநாதன் ஜெயதாஸ் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பலர் பிரசன்னமாயிருந்தனர். இதன்போது நினைவுப்பரிசுகள், பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. கிரான் பிரதேசத்தில் 38 கி.மீ. வீதிப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(துறைநீலாவணை நிருபர்)

30 வருட கால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச மக்களின் நிறைவேறாத நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வுகிட்டியுள்ளது.

கிரான் மக்களின் நீண்ட நாள் தேவையான கிரான் பாலம் தொடக்கம் மியான் குளம் பாலம் வரையிலான சுமார் 38கி.மீ. தூரத்தை செப்பனிட அனுமதிப் பெறப்பட்டதுடன், மாத்திரமல்லாது அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை பொதுஜன பெரமுன கட்சியின் மட்டு. மாவட்ட அமைப்பாளரும், மாவட்ட தமிழ்ப் பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் பிரதித் தலைவருமான பரமசிவம் சந்திரகுமாரின் அயராத முயற்சியால் இது சாத்தியமானதுடன், கிரான் பிரதேச மக்களின் தேவை கருதி கட்சியின் உயர் மட்ட அமைச்சர்களான பெசில் ராஜபக்ஷ, ஜோன்சன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சா போன்றவர்களுடன் தொடர் பேச்சுவார்த்தை நடத்தி குறித்த வேலைத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அப் பிரதேச மக்களால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலக்கிய ஆளுமை கவிஞர் கலாபூஷணம் பாலமுனை பாறூக்கிற்கு பொன்விழா

(மருதமுனை மேலதிக நிருபர்)



இலங்கையின் இலக்கியப்பரப்பில் தன்னை ஆழமாகத் தடம்பதித்து பொன் விழா காணும் மூத்த இலக்கிய ஆளுமை கலாபூஷணம் கவிஞர் பாலமுனை பாறூக். இவருக்கான பொன்விழா நிகழ்வு பாவேந்தல் பொன்விழாக் குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு பாலமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள பொறியியலாளர் மர்ஹூம் எம்.சி.அமீர் மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொன் விழாவில், முன்னிலை நட்சத்திரங்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஊப் ஹக்கீம், ஏ.எல்.எம்.அதாஉல்லா, ரிஷாட் பதியுதீன் ஆகியோருடன் அரசியல் பிரமுகர்கள், நிர்வாக சேவை அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், இலக்கியவாதிகள், உலமாக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில், கவிஞர் பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பணியைப் பாராட்டி 'பாவேந்தல் பொன்னேடு' என்ற பெயரில் மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் விருதுகள், நினைவுச்சின்னங்கள் மற்றும் பொன்னாடைகள், வாழ்த்து பத்திரங்கள், பரிசுப்பொதிகள் எனப் பெரும் கௌரவங்கள் வழங்கப்படவுள்ளன. இதன்போது, பாலமுனை பாறூக்கின் வலைக்குள் மலர்ந்த வனப்பு, பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள், மீளப் பறக்கும் நங்கணங்கள் ஆகிய புத்தகங்களும் வெளியிடப்படவுள்ளன.

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச செயலக பாலமுனை பாறூக் எனும் பெயரால் அனைவராலும் அழைக்கப்படும் இவரது முழுப்பெயர் முகம்மதுலெவ்வை முகம்மது பாறூக். இவர் 1954.01.01ஆம் திகதி மீராலெவ்வை மரைக்காயர் முகம்மதுலெவ்வை - ஆதம்லெவ்வை முஹல்லம் அலிமானாச்சி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# காதல் விவகாரம் கைகலப்பாக மாறியதால் மட்டு. ஜெயந்திபுரத்தில் வாள்வெட்டுத் தாக்குதல்

## பெண்ணொருவர் உட்பட எழுவர் படுகாயம்

(க.சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரத்தில் இளைஞர் ஒருவர் அவரது குழுவினருடன் அவர் காதலித்து வரும் பெண்ணின் உறவினர் மீது மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் (09) இரவு இடம்பெற்றுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை இளைஞர் ஒருவர் ஒருதலையாக காதலித்து வந்துள்ளதாகவும் அப்பெண்ணுக்கு விருப்பமில்லாத நிலையில், அவரை இளைஞன் பின் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வந்துள்ளதாகவும் இதனையடுத்து இருவரது உறவினருக்கிடையே இரண்டு தடவைகள் கைகலப்புகள் இடம்பெற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் இருபக்கமும் சமாதானமாகச் சென்றனர்.

இந் நிலையில், சம்பவ தினமான நேற்று முன்தினம் (09) இரவு 7 மணியளவில் ஜெயந்திபுர வீதியில் வைத்து குறித்த பெண்ணின் உறவினர் மீது இளைஞனின் குழுவினர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து. அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதையடுத்து வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களை மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தாக்குதலை மேற்கொண்ட குழுவினரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை றோட்டரிக் கழகத்தின் புதிய தலைவராக புஷ்பராஜா நியமனம்




(காரைதீவு நிருபர்)

கல்முனை றோட்டரிக் கழகத்தின் 21ஆவது தலைவரின் பதவியேற்பு வைபவம் கடந்த சனிக்கிழமை மாலை கல்முனையில் அமைந்துள்ள கிரீன் பார்க் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது முன்னைய தலைவர் றோட்டரியன் குகதாசனிடமிருந்து புதிய தலைவராக றோட்டரியன் ஸ்டீபன் புஷ்பராஜா வைபவ ரீதியாக தலைமைப் பொறுப்புகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் பதில் பீடாதிபதி கனகராசா பிரேம்குமார், விசேட அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், றோட்டரிக் கழக உறுப்பினர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# 2021ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவு சங்கத் தலைவராக சாய்ந்தமருது உதுமாலெப்பை தெரிவு

(திகாமடுல்ல நிருபர்)

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தருமான எம்.எம்.உதுமாலெவ்வை 2021ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்க தலைவர் விருதினை பெற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் என்பன இணைந்து 2021ஆம் ஆண்டின் கூட்டுறவு விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் செங்கலடி சௌபாக்கியா கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறந்த கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கான விருதினை எம்.எம்.உதுமாலெவ்வை பெற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் திருமதி



கலாமதி பிரதம அதிதியாக கலந்துகொண்டு இவ்விருதினை வழங்கி வைத்தார்.

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினை எம்.எம்.உதுமாலெவ்வை தலைமையிலான இயக்குநர் சபை கடந்த 2016 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு வகையில் கூட்டுறவுச் சங்கத்தினை இலாபமீட்டும் வகையில் முன்னெடுத்து செல்வதுடன் பல சமூக நலத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கொவிட் - 19 தொற்றினால் நாடு முடக்கப்பட்டபோது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் அம்பாறை மாவட்ட மக்களுக்கு மானிய அடிப்படையில் பொருட்களை பொதி செய்து வழங்க மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்களை கேட்டுக்கொண்டபோதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பின் வாங்கின. இருந்தும் சாய்ந்தமருது கூட்டுறவுச் சங்கமும் அதன் தலைமையும் துணிந்து மாவட்டத்தின் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இந்நிவாரணப் பணியினை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

விழாவின் சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் சிறந்த கூட்டுறவுச் சங்கமாக தெரிவுசெய்யப்பட்டது.

# வடக்கு - கிழக்கு இணைப்பு மூலமே தமிழ், முஸ்லிம் இனங்கள் சுதந்திரமாக வாழும் நிலை உருவாகும்!

## மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(வீரமுனை நிருபர்)

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டாம் என யாரும் கருதுவார்களானால், இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் அடிமைகளாகவே வாழும் நிலை உருவாகும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடக செயலாளரும் பட்டிருப்பு தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கக்கூடாது என முஸ்லிம் அரசியலாளர்கள் கூறும் கருத்து தொடர்பாக கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை சுதந்திரமடைந்த 1948 பெப்ரவரி 4ஆம் திகதிக்கு பின்னர் 1949 டிசம்பர் 18 இல் தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டி அடிப்படையிலான கொள்கையை முஸ்லிம் மக்கள் ஏற்றிருந்தனர்.

அதனடிப்படையிலேயே 1956இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியில் கல்முனைத் தேர்தல் தொகுதியில் வேட்பாளராக வீட்டுச்சின்னத்தில் போட்டியிட்ட எம்.எஸ்.காரியப்பர் 9,464 வாக்குகளைப் பெற்று வெற்றிப் பெற்றார். அதேபோல் பொத்துவில் தொகுதியிலும் எம்.எஸ்.முஸ்தபா 8,355 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற வரலாறுகள் உண்டு.

தமிழரசுக் கட்சியால் அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற சத்தியாக்கிரகம், பாதயாத்திரைகள், மாநாடுகள் எல்லாவற்றிலும் கிழக்குவாழ் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பயணித்த வரலாறுகள் பல உண்டு.

தமிழர் விடுதலைக் கூட்டணி 1976 மே 14இல் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இணைந்து செயற்பட்டவைகளை மறுதலிக்க முடியாது.

அதன் பின்னரான தமிழ் இளைஞர்கள் 36, விடுதலை இயக்கங்களை ஆரம்பித்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டபோதும் பல



முஸ்லிம் இளைஞர்களும் கணிசமாக போராடிய சம்பவங்களும் உண்டு. அதில் பிரதான விடுதலை இயக்கமாக இருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலும் சுமார் 35 மாவீரர்கள் ஆகுதியான வரலாறுகளையும் மறக்க முடியாது.

இவ்வாறாக இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு 1990 காலம் வரையும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கான சுதந்திரம், அரசியல் தீர்வு எல்லாமே வடக்கு, கிழக்கு இணைந்த தீர்வு என்பதில் முஸ்லிம் மக்களும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் உறுதியாக, ஒற்றுமையாகவே இருந்தனர்.

ஆனால், 1990இல் தமிழ் மக்களிடையே பிரித்தாளும் தந்திரத்தை சரியாக கடைப்பிடித்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச அரசு, முஸ்லிம் ஊர்காவல் படை ஒன்றை ஆரம்பித்து தமிழர்கள் மீதான திட்டமிட்ட படுகொலைகளை அரங்கேற்றியதன் விளைவாக தமிழ், முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்பட்டது.

1990இல் ஏற்பட்ட கசப்புணர்வு தமிழ், முஸ்லிம் அரசியல் இருப்பை வெகுவாக இன்று வரையும் பாதிப்புக்குள்ளாக்கியபோதும், கூட்டமைப்பினர் முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் பல தரப்பட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி வடக்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் தனித்துவம், அடையாளம், அரசியல் உரிமை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமையே சாத்தியமானது என்பதை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இருந்தபோதும் சிங்கள பெரும்பான்மைத் தலைவர்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்களை பதவி, சலுகை, அபிவிருத்தி என்ற அரசியலை மட்டும் நோக்காகக்கொண்டு செயல்படுவதற்கான திட்டங்களை அரங்கேற்றுவதால் பார்வைக்கு சரியாக தென்பட்டாலும் எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களுக்கான தனித்துவ அடையாளங்கள் இல்லாமல் போகும் ஆபத்துகள் நிறையவே உண்டு. இந்த உண்மைகளை கருத்திற்கொண்டு தமிழ்ப்பேசும் மக்களாக இணைந்த வடக்கு கிழக்கில் வாழ்வதுதான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாகும் என்பதை உணர வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# வவுணதீவு வயல் பிரதேசத்தில் குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை!

(கல்லடி நிருபர்)

வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி தவராசா (வயது - 60) என்பவர் தனக்குத் தானே தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் நேற்று முன்தினம் மாலை(09) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தனது மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் தனது சகோதரியுடன் வாழ்ந்து வந்ததாகவும் நாளாந்தம் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை தனது சகோதரியின் வீட்டிலிருந்து வெளியேறியவர் வீடு திரும்பாத நிலையில் நேற்று மாலை அவர் வயலிலுள்ள மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதிமன்ற நீதவான் வினோபா இந்திரனின் உத்தரவுக்கமைய, சம்பவ இடத்திற்குச்சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுணதீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை – மட்டு. பிரதான வீதியில் பஸ் – லொறி மோதி விபத்து; 27 பேர் காயம்



(எப்.ஆர்.எம்.பர்ஹான்,பதுர்தீன் சியானா)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி பட்டித்திடல் பகுதியில் லொறி மற்றும் பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த 27 பேர் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று (10) காலை இடம்பெற்றுள்ளது.

அம்பாறையிலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த தனியாருக்கு சொந்தமான பஸ்ஸும் மூதூரிலிருந்து சேருவில நோக்கி சென்றுகொண்டிருந்த லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த பஸ்ஸில் அதிகளவில் அரச உத்தியோகத்தர்கள் வருகை தந்ததாகவும் இதுவரைக்கும் 27 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் டிப்பர் வாகனத்தின் சாரதியின் கால்கள் உடைந்துள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். விபத்து தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கந்தளாயில் ரிப்பர் வாகன சில்லில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழப்பு



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராறு பகுதியில் டிப்பர் வாகனத்திற்குள் சிக்குண்டு வயோதிபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (09) மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த ஏ.எச்.சாவுல் ஹமீட் (76 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, அவரது வீட்டுக்குப் பின்னாலுள்ள காணிக்குள் டிப்பர் வாகனத்தில் மண் ஏற்றி வந்து அதனை கொட்டும்போது குறித்த இடத்தை காண்பித்துள்ளார். இதேவேளை, டிப்பர் பின்புறமாக வந்தபோது கால் டிப்பர் வாகன சில்லில் சிக்கி கீழே விழுந்து டிப்பர் வாகனத்தின் டயருக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதியை கைதுசெய்துள்ளதுடன், இறந்தவரின் சடலம் தற்போது கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை கந்தளாய் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் மூன்று நாட்கள் தொடர் மழை; வீதிகளில் தேங்கியுள்ள நீரால் போக்குவரத்து பாதிப்பு



(பாலமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்துவரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள் வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை, திராய்க்கேணி, ஜலால்தீன் புரம், உதுமா புரம், ஹுஸைனியா நகர் மீள்குடியேற்ற தாழ் நிலப்பிரதேசங்களிலுள்ள வீதிகள் நீரில் மூழ்கி காணப்படுவதுடன், வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளதால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தொடராக பெய்துவரும் அடைமழையினால் தாழ் நிலப்பிரதேசங்களில் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளதோடு, மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு, பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளனர். கடல் கொந்தளிப்பாக இருப்பதனால் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடற்றொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

நன்னீர் மீன்பிடித் தொழிலும் வெகுவாக பாதிப்படைந்துள்ளதுடன், வயல்கள் குடலைப்பருவம் என்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அன்றாட கூலித் தொழிலாளர்களின் நாளாந்த தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. மழையுடன் கூடிய காலநிலை தொடருமானால் தாழ் நிலப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் இடம்பெயரக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலய பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலய, சாய்ந்தமருது கமு/கமு/அல்- ஹிலால் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் பாடசாலை அதிபர் யூ.எல்.எம்.நஸார் தலைமையில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நேற்று முன்தினம் (09) மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில், 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதனடிப்படையில், பதவி வழி தலைவராக பாடசாலை அதிபர் யூ.எல்.எம்.நஸார், உப தலைவராக அப்பாடசாலையின் (முன்னாள்) ஓய்வுநிலை அதிபர் ஐ.எல்.ஏ.மஜீட், செயலாளராக கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர் எம்.ஐ.சர்ஜூன், உதவிச் செயலாளராக இளைஞர் சேவை அதிகாரி பீ.எம்.றியாத், பொருளாளராக தென் கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர் ஏ.சீ.எம்.றியாஸ், உதவி பொருளாளராக எஸ்.எச்.பதீன் அல் இலாஹி மற்றும் ஆலோசகராக வைத்தியர். எம்.ஏ.எம்.முனீர் ஆகியோர் தெரிவாகினர்.

பழைய மாணவர் சங்க செயற்பாடுகளை விஸ்தரித்தல், பாடசாலை பௌதீகவள அபிவிருத்தி, கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தல், பாடசாலை மாணவர்களின் புறக்கிருத்திய நடவடிக்கைகளை விருத்தி செய்தல் மற்றும் பலதரப்பட்ட விடயங்களில் பழைய மாணவர்களின் பங்களிப்பை வழங்குதல் தொடர்பில் எதிர்காலத்தில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் பல்வேறு விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டு அவற்றை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கான முன்மொழிவுகளும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் குளத்தின் 04 வான் கதவுகள் திறப்பு



(நிலாவெளி நிருபர்)

திருகோணமலையில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் நீர்ப்பாசனப் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீரின் அளவு சுமார் 107,000 கன அடிகள் உள்ளன. வினாடிக்கு 450 கன அடி வீதம் வெளியேற்றப்பட்டு வருகிறது.



காத்தான்குடியில் சமையல் எரிவாயு (லீற்றோ) பெற்றுக்கொள்ள பல மணிநேரம் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்ததை படத்தில் காணலாம். (காத்தான்குடி நிருபர்)

# காரைதீவில் தளபாடங்கள் வழங்கிவைப்பு



(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காஸிமின் 2021ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட காரைதீவு கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயத்திற்கு பாடசாலை அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

மேலும், இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் நிதியொதுக்கீட்டில் மாவடிப்பள்ளி ரஹ்மானியா கலாசார நிலையத்திற்கு ஒலிபெருக்கி உபகரணங்களும், மாவடிப்பள்ளி பொது நூலகத்திற்கு புதிய புத்தகங்களும் வழங்கிவைக்கப்பட்டன. அதே போன்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தெரிவுசெய்யப்பட்ட மாளிகைக்காடு மேற்கு கரைவாகு கலை இலக்கிய மன்றத்திற்கு இலத்திரனியல் உபகரணங்களும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் கலந்துகொண்டு பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார். மேலும் இந்நிகழ்வுகளில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், கணக்காளர் என்.ஜயசர்மிகா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தி.மோகனகுமார், கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி, ஆசிரியரும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அறிவிப்பாளருமான ஏ.எல். நயீம், கலைஞர் எஸ். ஜனூஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் எம்.எச்.எம்.இஸ்மாயில் உட்பட பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருதில் ஜனாஸா நல்லடக்க சேவையை முன்னெடுக்க அமைப்பு உதயம்



(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாஸா நல்லடக்க சேவைகளை தன்னார்வத்துடன் முன்னெடுப்பதற்காக அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை எனும் பெயரிலான இந்த அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் (09) மாலை நடைபெற்றது.

சாய்ந்தமருது ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் எம்.எம்.சலீம் மௌலவி முன்னிலையில் சிவில் சமூக செயற்பாட்டாளர் எம்.எம்.உதுமாலெப்பை தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாஸா நல்லடக்க விடயத்தில் மக்கள் எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் மற்றும் கால தாமதங்களை நிவர்த்தி செய்வதற்காகவும் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் ஒழுங்கமைக்கப்பட்ட தன்னார்வ அமைப்பொன்றின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டதுடன் அதற்கான முன்னெடுப்புகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அமைப்பின் ஆரம்ப செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உலமா சபைத் தலைவர் எம்.எம்.சலீம் மௌலவி தலைமையில் 23 பேர் கொண்ட தற்காலிக முகாமைத்துவ சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. இந்நிகழ்வில் எம்.எம்.அஷ்ரப் மௌலவி, சாய்ந்தமருது வர்த்தகர் சங்கத் தலைவர் எம்.எம்.முபாறக், சிவில் சமூக செயற்பாட்டாளர்களான எம்.எம்.சாதாத், யூ.கே.காலிதீன், அஸ்வர் அப்துஸ் ஸலாம், மருதூர் அன்சார், எம்.எம்.முர்ஷித், எம்.எம்.அமீர், ஏ.ஜி.எம்.நிம்சாத் உள்ளிட்ட பலரும் கருத்துரை வழங்கினர்.


இந்திய செய்திகள்

# இந்தியாவில் 2 இலட்சத்தை நெருங்கும் தினசரி கொரோனா பாதிப்பு

## ஓமிக்ரொன் பரவலும் தீவிரம்; இதுவரை 4,033 பேருக்கு தொற்று

இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு 2 இலட்சத்தை நெருங்கியுள்ளது. நேற்று 24 மணிநேரத்தில் 1,79,723 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா முழுவதும் இதுவரை 3,57,08,442 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4,83,936பேர் உயிரிழந்துள்ளனர்.




மேலும் கொரோனா தொற்றுக்குள்ளான 7,24,334பேர் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன் அவர்களில் 8,944பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**அதிகரிக்கும் ஓமிக்ரொன் பாதிப்பு**

இந்தியாவில் மொத்த கொவிட் பாதிப்புகளில் ஓமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4,033 ஆக அதிகரித்துள்ளது. அதிகபட்சமாக மஹாராஷ்டிராவில் 1,216 பேரும், ராஜஸ்தானில் 529 பேரும், டில்லியில் 513 பேரும் ஓமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் நேற்றுவரை 151.94 கோடி டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கு கொரோனா தொற்று



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தமது இணைய பக்கத்தில் தெரிவித்துள்ள அவர், கொரோனா அறிகுறிகள் இருந்த நிலையில் நடத்தப்பட்ட சோதனையில் தொற்று பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வீட்டிலேயே தனிப்படுத்திக் கொண்டுள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சமீபத்தில் தன்னை சந்தித்த அனைவரும் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு பரிசோதனை செய்துகொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## குஷ்புவுக்கு கொரோனா; ஷோபனாவுக்கு ஓமிக்ரொன்

### கொலிவுட் - பொலிவுட் - டொலிவுட் என திரையுலகை கலங்கடிக்கும் கொவிட் தொற்று





கொரோனாவால் திரையுலகினரும் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். உலக மக்களின் ஒட்டுமொத்த கவலையே எப்போது கொரோனா தொற்று முழுமையாக ஒழியும் என்பதுதான். புதிது புதிதாக இந்த நோய் தொற்று உருமாறி வருவதால் உலகமே கலங்கிப்போயுள்ளது. தற்போது இந்நோய் தொற்று ஓமிக்ரொன், டெல்மிக்ரொன் தற்போது டெல்ட்டாக்ரொன் என புதிய வடிவில் உலகை அச்சுறுத்தி வருகிறது. இதனால் இந்தியாவில் கொரோனா அலை மீண்டும் வேகம் எடுத்துள்ளது.

இதில் திரையுலகினரும் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி என பல மொழிகளில் உள்ள கலைஞர்களும் இந்நோய் தொற்றுக்குள்ளாகி வருகின்றனர்.

கமல்ஹாசன், வடிவேலு, சுராஜ் உள்ளிட்டோர் இந்நோய் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தனர். தற்போது தமிழில் சத்யராஜ், திரிஷா, ஷெரின், விஷ்ணு விஷால், தெலுங்கில் மகேஷ்பாபு, தமன், லட்சுமி மஞ்சு, ஹிந்தியில் அர்ஜுன் கபூர் குடும்பம், கரீனா கபூர், ஸ்வரா பாஸ்கர் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

இந்நிலையில், நேற்று நடிகைகள் ஷோபனா மற்றும் குஷ்பு ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் ஷோபனா ஓமிக்ரொன் வகை வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தளபதி, இது நம்ம ஆளு உள்ளிட்ட தமிழில் ஏராளமான படங்களிலும், தென்னிந்திய மொழிகளிலும் நடித்துள்ள ஷோபனா நடிப்போடு நடனத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராகவுள்ளார். நடனப் பள்ளியும் நடத்தி வருகிறார்.

ஓமிக்ரொன் தொற்றுக்குள்ளானமை குறித்து ஷோபனா தெரிவிக்கையில்,

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தபோது எனக்கு ஓமிக்ரொன் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. உடல்வலி, குளிர் நடுக்கம் போன்றவை எனக்கு அறிகுறிகளாக இருந்தன. 2 டோஸ் தடுப்பூசி செலுத்தியதால் இந்த வகை வைரஸிலிருந்து 85 பாதுகாப்பு அளிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். இந்த வைரஸ் தொற்று இந்த ஓமிக்ரொனுடன் முடிவுக்கு வர வேண்டுமென ஆண்டவனை வேண்டுகிறேன் - என்றார்.

குஷ்பு தெரிவிக்கையில், "இரண்டு அலைகளை கடந்து வந்த பின் இறுதியாக கொவிட் என்னை தொற்றிக்கொண்டது. நேற்றுமுன்தினம் மாலைவரை நெகட்டிவ்வாக இருந்தது. நேற்று பரிசோதனையில் பொசிட்டிவ் என வந்தது. வீட்டிலேயே என்னை தனிமைப்படுத்தி சிகிச்சைபெற்று வருகிறேன். தனியாக இருப்பதை வெறுக்கிறேன். ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் பரிசோதனை செய்துகொள்ளுங்கள்" - என்றார்.

## மாவிலையில் தோரணம் மட்டுமல்ல; மாஸ்க் கட்டவும் ட்ரை பண்ணலாம்



மாவிலை தோரணம் கட்ட மட்டுமல்ல; மாஸ்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று விஜயவாடா இயற்கை விளைபொருட்கள் கண்காட்சியில் ஒருவர் வேடிக்கையாக அணிந்து வந்தது பலரது கவனத்தை ஈர்த்தது.

விஜயவாடாவில் உரம், யூரியா, பூச்சிக்கொல்லி பயன்படுத்தாமல் இயற்கையாக விளையும் தானியங்களைப் பயன்படுத்தினால் பல்வேறு நோய்களிலிருந்து மக்கள் விடுபடலாம் என்பதற்காக இயற்கைப் பொருட்கள் கண்காட்சிக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

அப்போது ஒருவர் தன் கடையை நோக்கி வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வண்ணம் மாவிலைகளைக் கோர்த்து முகக்கவசமாக அணிந்திருந்தார். மக்கள் வியப்போடு அவரைப் பார்த்துச் சென்றனர். உண்மையில் மாவிலைகளை வைத்து முகக்கவசம் அணிவது நடைமுறையில் இல்லாத, அங்கீகரிக்கப்படாத ஒன்று என்பதால் இதனை மக்கள் வேடிக்கையாகவே பார்த்து நகர்ந்தனர்.

எனினும், நாடு முழுவதும் கொரோனா அதிகம் பரவிவருவதால் முகக்கவசம் பற்றிய விழிப்புணர்வு மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிற இன்றைய சூழலில், ஒருவகையில் இது கொரோனாவுக்கான விழிப்புணர்வாக உள்ளதாகவும் மக்கள் அவரை பாராட்டவும் செய்தனர்.

## காக்கிச்சட்டையில் அருள்பாலித்த காசி காலபைரவர்




உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் அமைந்துள்ள பாபா கால பைரவர் கோயிலில் அமைந்துள்ள கால பைரவருக்கு முதல் முறையாக காவல்துறையின் சீருடை அணிவிக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

காசியின் காவலர் என்று பக்தர்களால் அழைக்கப்படும் கால பைரவருக்கு காவல்துறையினர் அணியும் தொப்பி தலையில் அணிவிக்கப்பட்டு, நெஞ்சில் காவலர்களுக்கான பதக்கமும் அணிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கையில் காவல்துறையினர் வைத்திருக்கும் தடியும், மற்றொரு கையில் புகார்களைப் பதிவுசெய்வதற்கான நோட்டும் வைத்துக்கொண்டு கால பைரவர் புதிய வடிவில் பக்தர்களுக்கு நேற்று அருள்பாலித்தார்.

கால பைரவருக்கு இப்படி ஒரு புதிய அலங்காரம் செய்யப்பட்டிருப்பது குறித்து செய்தி பரவியதும், அதனை தரிசிக்க ஏராளமானோர் கோயிலில் திரண்டிருந்தனர்.

கால பைரவரே அமர்ந்து அனைவரது முறைப்பாடுகளையும் பதிவு செய்துவிட்டால், யாருடையதும் நிராகரிக்கப்படாது என்று பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் கூறுகிறார்கள்.

## மகரஜோதி தரிசனத்திற்கு இன்னும் இருப்பது மூன்று நாட்கள் மட்டுமே

### சபரிமலையில் முன்னேற்பாடுகள் தீவிரம்

சபரிமலையில் மகரஜோதி தரிசனத்திற்கு இன்னும் மூன்று நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், முன்னேற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

டிசம்பர் 31ஆம் திகதி மகரஜோதி பூஜைகள் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து சபரிமலைக்கு அதிகமான பக்தர்கள் வந்துசெல்கின்றனர். இந்த சீசனில் எட்டு நாட்களில் 14.65 இலட்சம் பேர் தரிசனம் செய்துள்ளனர். சன்னிதானம், பம்பை மற்றும் நிலக்கல்லில் தேவசம்போர்டும், அரசின் பல்வேறு துறை அதிகாரிகளும் இணைந்து, மகரஜோதி தரிசனத்திற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

பாண்டி தாவளம், மாளிகைப்புறம் உள்ளிட்ட பகுதிகளில், பக்தர்கள் அமர்ந்து ஜோதி தரிசனம் செய்வதற்காக தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பாண்டிதளத்தில் மட்டும் 8,000 பேர் தரிசனம்செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மகரஜோதியன்று மட்டும், ஒன்றரை இலட்சம் பக்தர்கள் சன்னிதானத்தில் இருப்பர் என்ற கணக்கின் அடிப்படையில், பொலிஸார் பாதுகாப்புப் பணிகளை செய்துவருகின்றனர்.

சூரியன் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு கடக்கும் முகூர்த்தத்தில், சபரிமலையில் மகர சங்கராந்தி பூஜை நடைபெறும். இந்த ஆண்டு 14ஆம் திகதி மதியம் 2.29 மணிக்கு இந்த பூஜை நடக்கிறது. அந்தநேரத்தில், திருவிதாங்கூர் அரண்மனையிலிருந்து கொடுத்துவிடப்படும் நெய் தேங்காய்கள் உடைக்கப்பட்டு, நேரடியாக ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்யப்படும்.

திருவிதாங்கூர் தேவசம் போர்ட் தலைவர் அனந்தகோபன் கூறியதாவது:

ஜனவரி 14ஆம் திகதி மாலையில் நடைபெறும் மகரஜோதி தரிசனத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மகரஜோதிக்கு பின்னரும் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வரலாம் என்பதால், அதற்கேற்ப அப்பம், அரவணை, பிரசாதம் தயாரிக்கவும், எருமேலி பேட்டை துள்ளலுக்கும், பந்தளம் திருவாபரணம் பவனிக்கும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

எருமேலி பேட்டை துள்ளலுக்கு முன்னோடியாக, சந்தன குட பவனி நேற்று இரவு எருமேலியில் நடைபெற்றது.

**காட்டுப்பாதையில் பக்தர்களின் பசி தீர்க்கும் ஐயப்பா சேவா சங்கம்**

சபரிமலைக்கு செல்ல அடர்ந்த காட்டுக்குள் அமைந்துள்ள பெருவழி பாதை வழியாக வரும் பக்தர்களுக்கு பசி தீர்க்கும் பணியில் ஐயப்பா சேவா சங்கம் ஈடுபட்டுள்ளது.



பெரு வழிப்பாதையில் அழுதை முதல் பம்பை வரை 18 கிலோமீற்றர் தூரம் பெரியார் புலிகள் சரணாலய காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு வனத்துறை சார்பில் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டாலும் அவை போதுமானதாக இல்லை. அழுதையில் செங்குத்தான ஏற்றம் ஏறி கரிமலையில் இறங்கும்போது பக்தர்கள் சோர்வடைந்து விடுகின்றனர். இவர்களுக்கு உற்சாகம் ஏற்படுத்தும் வகையில் ஐயப்பா சேவா சங்கம் சார்பில் கஞ்சி வழங்கப்படுகிறது.

## உலகப் புகழ்பெற்ற அவனியாபுரம் - அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகள் 14 -16இல்

### 300 வீரர்கள்; 150 பார்வையாளர்களுக்கு மட்டுமே அனுமதி

உலகப் புகழ்பெற்ற தமிழர் மரபு விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழகத்தில் எதிர்வரும் 14ஆம் திகதிமுதல் 16ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்க 300 வீரர்கள் மற்றும் 150 பார்வையாளர்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.



பொங்கல் பண்டிகையையொட்டி மதுரை மாவட்டத்தில் நிகழாண்டு ஜனவரி 14ஆம் திகதி அவனியாபுரம், 15ஆம் திகதி பாலமேடு, 16ஆம் திகதி அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கால்நடை மருத்துவமனைகளில், ஜல்லிக்கட்டுக் காளைகளுக்கு உடல் தகுதிச் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில், நிகழாண்டு ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்த நிலையில், கூடுதல் கட்டுப்பாடுகளுடன் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என ஏற்கனவே அமைச்சர் மூர்த்தி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தமிழக அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள்:

ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300இற்கு உட்பட்டோரே பங்கேற்க வேண்டும்.

எருது விடும் நிகழ்வில் 150 வீரர்களுக்கு அதிகமாகாமல் பங்கேற்க அனுமதி வழங்கப்படும்.

போட்டியில் பங்கேற்கும் அனைவரும் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். வீரர்கள் அனைவரும் நெகட்டிவ் சான்றிதழும் சமர்பிக்க வேண்டும். கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் போட்டிக்கு இரண்டு நாளுக்கு முன்பு எடுத்திருக்கவேண்டும்.

## தமிழகத்தில் கொரோனா கட்டுப்பாடுகளை அதிகரிப்பது குறித்து முதலமைச்சர் ஆலோசனை



தமிழகத்தில் கொரோனா கட்டுப்பாடுகளை அதிகரிப்பது குறித்து முதலமைச்சர் ஸ்டாலின் மருத்துவ நிபுணர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளார். அதில் எடுக்கும் முடிவின்படி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அறிவிக்கப்படலாம். மேலும், நீண்டதூர பஸ் போக்குவரத்தும் நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனா தொற்றுப் பரவல், நேற்று ஒரேநாளில் 13 ஆயிரத்தை எட்டியதால், நிலைமை மோசமாகி விடுமோ என பொதுமக்களும் பீதியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் 2020 மார்ச்சில் கொரோனா முதல் அலை; 2021 மே மாதம் இரண்டாவது அலை பரவத் துவங்கியது. தற்போது மூன்றாவது அலை வேகமாக பரவி வருகிறது. அத்துடன், உருமாறிய டெல்ட்டா, ஓமிக்ரொன் தொற்றுகளின் பரவலும் அதிகரித்துள்ளது.

கடந்தாண்டு டிசம்பர் 26 வரை தினமும் 700இற்கும் குறைவானவர்களே தொற்றால் பாதிக்கப்பட்டு வந்தனர். ஆங்கில புத்தாண்டான ஜனவரி முதலாம் திகதி 1,489 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.அதன்பின் தொற்று பரவல் படிப்படியாக அதிகரித்தது. தற்போது கொரோனா பரவல் வேகம் அதிகரித்துள்ளது. இந்த தொற்று பரவல், மார்ச் வரை உச்சத்தில் இருக்கும் என தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை எச்சரித்துள்ளது.

தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில், மாநிலம் முழுதும் இம்மாதம் 6ஆம் திகதிமுதல் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. இரவு 10.00 மணிமுதல் அதிகாலை 5.00 மணிவரை, இரவுநேர ஊரடங்கு நடைமுறையிலுள்ளது.

இதன் தொடர்ச்சியாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மாநிலம் முழுதும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. அதனால், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டன. அரச பஸ் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. போக்குவரத்து முடங்கியதால், முக்கிய வீதிகள் எல்லாம் வெறிச்சோடின.

# உலக செய்திகள்

'ஏரோ மெக்சிக்கோ' ஊழியர்களில் ஏராளமானோருக்கு கொரோனா தொற்று

## மெக்சிக்கோவில் 200 விமான சேவைகள் இரத்து

விமான நிலையத்திலேயே 4 நாட்களாக பயணிகள் தவிப்பு



மெக்சிக்கோவில் கொரோனா தொற்று அதிகரித்துள்ளது. இதனையடுத்து சுமார் 200 விமானங்களின் சேவைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. இதனால் 4 நாட்களாக விமான நிலையத்திலேயே பயணிகள் தவித்து வருகின்றனர்.

'ஏரோ மெக்சிக்கோ' விமான நிறுவனத்தின் ஊழியர்களில் ஏராளமானோருக்கு தொற்று உறுதியானதால், கடந்த வெள்ளிக்கிழமை முதல் அதன் பெரும்பாலான விமானங்களின் சேவை உடனடியாக நிறுத்திவைக்கப்பட்டது.

இதனால், விமான ரிக்கெட் எடுத்தவர்கள் செய்வதறியாது மெக்சிக்கோ சிட்டி விமான நிலையத்தில் தவித்து வருகின்றனர். உரிய நேரத்தில் செல்லாவிட்டால் தனது அமெரிக்க வேலை பறிபோகும் என பெண்ணொருவர் வேதனை தெரிவித்தார்.

மேலும், விமான நிலையத்தில் தங்களுக்கு உணவுக்கு கூட சரிவர ஏற்பாடுசெய்யப்படவில்லை என பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## ஆங் சான் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறை

### மியன்மார் சிறப்பு நீதிமன்றம் உத்தரவு



மியன்மார் ஜனநாயக போராளி ஆங் சான் சூகிக்கு 3 வழக்குகளில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மியன்மாரில் கடந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சூகி அரசை கவிழ்த்துவிட்டு ஆட்சியை இராணுவம் கைப்பற்றியதுடன், மியன்மார் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி, மியன்மாரின் ஜனாதிபதி வின் மைண்ட் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களையும் வீட்டுக்காவலில் வைத்தது. அத்துடன், நாடுமுழுவதும் அவசர நிலையையும் இராணுவம் பிரகடனப்படுத்தியது.

இதனிடையே வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகி மீது, தகவல் தொடர்பு சாதனங்களை சட்டவிரோதமாக இறக்குமதிசெய்தமை, கொரோனா கட்டுப்பாடு விதிமுறைகளை கடைப்பிடிக்காததன் மூலம் தேசிய பேரிடர் மேலாண் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பான வழக்கொன்றில் சில மாதங்களுக்கு முன்னர் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில், மேலும் 3 வழக்குகளில் சூகிக்கு 4 ஆண்டுகால சிறைத்தண்டனையை மியன்மார் சிறப்பு நீதிமன்றம் விதித்துள்ளது. 76 வயதாகும் நோபல் பரிசு பெற்ற சூகிக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது அவரது ஆதரவாளர்கள் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சூகி மீதான 11குற்றச்சாட்டுகளும் உறுதிசெய்யப்பட்டால் 102 ஆண்டுகள் வரை அவர் சிறைத்தண்டனை பெற வாய்ப்புள்ளதாக சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

"மேலும் 11 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டால் 102 ஆண்டுகள் தண்டனைக்கு வாய்ப்பு"

## 3 ஆண்டுகள் சிறைவாசம்: சவூதி இளவரசி விடுவிப்பு



கைதுசெய்யப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்த சவூதி இளவரசியும், அவரின் மகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சவூதி அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி பஸ்மா பின்ட் சவூத் (வயது 58), அவரது மகள் சொகௌத் அல்-ஷரீப் ஆகியோர் கடந்த 2019, மார்ச் மாதம் திடீரென மாயமாகினர். இந்நிலையில், தான் சிறையிலடைக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகத்தில் பஸ்மா தெரிவித்த பின்னரே அவர் கைதுசெய்யப்பட்டமை தெரியவந்தது.

பஸ்மாவும், அவரின் மகளும் எதற்காக கைதுசெய்யப்பட்டனர் என்ற காரணம் குறித்து சவூதி அரசு தெரிவிக்கவில்லை. ஆனால், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் வசம் நாட்டின் அதிகாரம் முழுமையாக வந்த நிலையில், அரச குடும்ப உறுப்பினருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இது பார்க்கப்பட்டது. விமர்சகர்கள், செயற்பாட்டாளர்கள், அரச குடும்ப போட்டியாளர்களுக்கு எதிராக பல நடவடிக்கைகளை இளவரசர் முகமது பின் சல்மான் எடுத்துவந்தார்.

இந்நிலையில், தலைநகர் ரியாத்தின் புகர் பகுதியிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்த பஸ்மாவும், அவரின் மகளும் விடுவிக்கப்பட்டு கடந்த வாரம் வீடு திரும்பியதாக பஸ்மாவின் சட்ட ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

## சைப்ரஸில் மரபணு மாற்றம்கொண்ட புதிய வைரஸ் 'டெல்ட்டாக்ரொன்' கண்டுபிடிப்பு

### 25 பேருக்கு தொற்று உறுதி



கொரோனாவின் மரபணு மாற்றம் கொண்ட மற்றொரு புதிய வைரஸ் சைப்ரஸில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'டெல்ட்டாக்ரொன்' (Deltacron) என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த புதிய வகை கொரோனா, டெல்ட்டா வைரஸ் மற்றும் ஒமிக்ரொனின் கலவையாகும். இரண்டும் ஒன்றுசேர்ந்த இந்த புதிய வடிவத்தின் பாதிப்புகள் எப்படி இருக்கும் என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஒமிக்ரொன் மற்றும் டெல்ட்டாவின் பாதிப்புகள் இதிலிருக்கும் என்று சைப்ரஸ் பல்கலைக்கழகம் நுண் உயிரி மருத்துவத்துறை அறிவித்துள்ளது. இதுவரை பரிசோதிக்கப்பட்டவர்களில் 25 பேருக்கு இத்தகைய புதிய வைரஸின் பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த 25 பேரும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் புதிய வைரஸ் குறித்த ஆய்வுகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## ரோஹிங்கிய அகதிகள் முகாமில் பயங்கரத் தீ; நூற்றுக்கணக்கான வீடுகள் எரிந்து நாசம்



தென்கிழக்கு பங்களாதேஷிலுள்ள ரோஹிங்கிய அகதிகள் முகாமில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. இதனால் சுமார் 5000 பேர் தமது வீடுகளை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காக்ஸ் பஜாரின் 16ஆவது முகாமில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த அவசரகால உதவிப் பணியாளர்கள் பலநேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

மியன்மாரில் 2017ஆம் ஆண்டு இராணுவம் முன்னெடுத்த தாக்குதல் காரணமாக சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிங்கிய இஸ்லாமியர்கள் பங்களாதேஷிலுள்ள அகதிகள் முகாம்களில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முகாமிலுள்ள கொரோனா சிகிச்சை மையத்தில் கடந்த வாரம் தீ விபத்து ஏற்பட்டது. இதேபோன்று கடந்த ஆண்டிலும் பல முறை அகதிகள் முகாமில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து ரோஹிங்கிய அகதிகள் முகாமில் தீ விபத்து ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

## நியூயோர்க் அடுக்குமாடி குடியிருப்பில் தீ: 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவின் நியூயோர்க்கில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

நியூயோர்க் நகர 19 மாடி குடியிருப்பொன்றில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. இதில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தைகள் உட்பட 19 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 32 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்று வருவதால் உயிரிழப்பு அதிகரிக்கும் அச்சம் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இலேசான காயங்களுடன் 60 பேர் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தண்டவாளத்தில் வீழ்ந்து நொறுங்கிய விமானம்: நொடிப்பொழுதில் விமானியை காப்பாற்றிய மக்கள்

### விமானத்தை இடித்து நொறுக்கிய விரைவு ரயில்; சினிமா பாணியில் திக்..திக்.. மீட்புக் காட்சிகள்



அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் வான்வெளியில் பறந்துகொண்டிருந்த சிறிய ரக விமானமொன்று விபத்துக்குள்ளாகி, ரயில் தண்டவாளத்தின் நடுவே வீழ்ந்த நிலையில், அதிவேகத்தில் வந்துகொண்டிருந்த ரயில் மோதுவதற்குள் அதிலிருந்த விமானி மீட்கப்பட்ட காட்சி வெளியாகியுள்ளது.


Pacoima நகரில் ஒற்றை இன்ஜின் விமானம் ஒன்று Whiteman விமான நிலையம் அருகேயுள்ள ரயில் தண்டவாளத்தில் வீழ்ந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த விமானியை ரயில் வருவதற்குள் அருகில் இருந்தவர்கள், விமான இடிபாடுகளிலிருந்து வெளியே இழுத்து காப்பாற்றினர்.

விமானத்தில் பயணிகள் எவரும் இல்லாததால் நல்வாய்ப்பாக உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

உலகம் உருவான இரகசியத்தைத் தேடி பயணம்:

## தங்க முலாம் கண்ணாடியை விரித்தது ஜேம்ஸ் வெப் டெலஸ்கோப்



உலகம் எப்படி உருவானது என்ற இரகசியத்தைக் கண்டறிவதற்காக நாசா அனுப்பிய உலகின் மிகப்பெரிய, சக்தி வாய்ந்த டெலஸ்கோப்பான 'ஜேம்ஸ் வெப்'பின் தங்க முலாம் பூசப்பட்ட கெமரா கண்ணாடி விண்வெளியில் நேற்றுமுன்தினம் முழு அளவில் விரிந்தது.

உலகமும், அதன் உயிரினங்களும் எப்படி உருவாயின என்பது பெரிய இரகசியமாக இருந்துவருகிறது. இதை கண்டுபிடிப்பதற்காக உலக நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இதற்காக, பூமிக்கப்பால் விண்வெளியில் ஏற்படும் மாற்றங்களை கண்காணிப்பதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா, பல ஆண்டுகளுக்கு முன்பாக 'ஹப்பிள்' என்ற டெலஸ்கோப்பை அனுப்பியது.

இந்நிலையில், நிலவிலிருந்து 3 மடங்கு தொலைவில் இருந்தபடி, சூரியனை சுற்றிவந்து விண்வெளியில் நடக்கும் சம்பவங்களை படம் பிடிப்பதற்காக 'ஜேம்ஸ் ஹெப்' என்ற உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப்பை கடந்த மாதம் 25ஆம் திகதி நாசா அனுப்பியது.

சூரியனை பல ஆண்டுகள் சுற்றிவந்து அண்டத்தில் நடக்கும் அதிசயங்களை இது படம் பிடித்து, நாசாவுக்கு அனுப்பியுள்ளது. இந்நிலையில், இந்த டெலஸ்கோப்பை விண்வெளியில் நிலைநிறுத்தும் முதல் கட்ட பணியை நாசா வெற்றிகரமாக முடித்துள்ளது.

இதன் முக்கிய அம்சமாக, டெலஸ்கோப்பின் தங்க முலாம் பூசப்பட்ட கெமரா கண்ணாடி விரிக்கப்பட்டது. இதன்மூலம், இது துல்லியமாக படம் பிடிக்கும் திறனை அது அடைந்துள்ளது.

தரைக்கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடியே நாசா விஞ்ஞானிகள் இதை சாதித்துள்ளனர். ஹப்பிள் டெலஸ்கோப்பை விட ஜேம்ஸ் வெப் டெலஸ்கோப் 100 மடங்கு சக்திமிக்கது. விண்வெளியில் இது 10 ஆண்டுகளுக்கும் மேலாக சுற்றிவந்து ஆய்வுகள் செய்யவுள்ளன. பூமியிலிருந்து 15 இலட்சம் கி.மீ. தொலைவில் ஜேம்ஸ் வெப் நிலைநிறுத்தப்படவுள்ளது.

## ஹெலிகொப்டர் மூலம் போதைப்பொருள் கடத்தல்

### ஸ்பெயினில் 11 பேர் கைது



ஸ்பெயினில் ஹெலிகொப்டர் மூலம் போதைப்பொருள் கடத்திய 11 பேரை அந்நாட்டு பொலிஸார் கைதுசெய்தனர்.

2 ஆண்டுக்கும் மேலாக இரகசிய சோதனையில் ஈடுபட்டுவந்த நிலையில், கைமேல் பலனாக இரண்டரை தொன் அளவிலான ஹஷிஷ் போதைப்பொருள், கஞ்சா, 4 ஹெலிகொப்டர்கள், ட்ரெக், கார்கள் சிக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்பெயினிலிருந்து பிரான்ஸுக்கு கார் மற்றும் ட்ரெக்குகள் மூலம் போதைப்பொருளை கடத்தவிருந்த திட்டத்தை தடுத்ததாகவும், கடத்தலில் தொடர்புடைய மேலும் 9 பேரை பிரான்ஸில் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# முதல் ஆசிய அணியாக சாதனை படைக்குமா இந்தியா?

## டெஸ்ட் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் போட்டி இன்று

இந்திய – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி இன்று இலங்கை நேரப்படி பிற்பகல் 2.00 மணிக்கு கேப்டவுனில் ஆரம்பமாகிறது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரு போட்டிகள் நிறைவில் தொடர் 1-1 என்ற ரீதியில் சமநிலை பெற்றுள்ளது. முதுகுவலியால் இரண்டாவது டெஸ்டில் ஆடாத இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி இன்றைய போட்டியில் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



வேகப்பந்துவீச்சுக்கு சாதகமான கேப்டவுன் மைதானத்தில் இதுவரை எந்த ஆசிய அணியும் டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றது கிடையாது. இந்திய அணி இங்கு 5 டெஸ்ட்களில் விளையாடி 3இல் தோல்வியும், 2இல் சமநிலையும் கண்டுள்ளது. மேலும் பாகிஸ்தான், இலங்கை அணிகள் தலா 4 டெஸ்ட்களில் விளையாடி அனைத்திலும் தோல்வி கண்டுள்ளது.

# வழக்கில் வெற்றிபெற்ற ஜோகோவிச்



ஆஸி. விசா ரத்துக்கு எதிராக தான் மேற்கொண்ட வழக்கில் செர்பிய டென்னிஸ் நட்சத்திரம் நோவக் ஜோகோவிச் வெற்றி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்கேற்கும் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்று போட்டி அமைப்பு குழுவினரும் அவுஸ்திரேலிய அரசும் அறிவுறுத்தியிருந்தனர். கடந்த 5ஆம் திகதி மெல்போர்ன் விமான நிலையத்திற்கு சென்ற ஜோகோவிச்சை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். காரணம் அவரிடம் கொரோனா தடுப்பூசி சான்றிதழ் இல்லை.

செர்பிய அரசு இதைத் தனிப்பட்ட அவமானமாகக் கருதியது. ஜோகோவிச்சுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று கூறியது. ஜோகோவிச் தடுப்பூசிக்கு எதிராக கருத்து கொண்டவர். அவர் இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. சிறப்பு அந்தஸ்து அடிப்படையில் தனக்கு மருத்துவ விலக்கு உள்ளதாக ஜோகோவிச் ட்வீட் செய்திருந்தார். ஆனால், அதையெல்லாம் கண்டுகொள்ளாத ஆஸி. அரசு அவரது விசாவை இரத்துச் செய்தது.

இதற்கெதிராக அவுஸ்திரேலிய உச்ச நீதிமன்றத்தில் ஜோகோவிச் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு அவசர வழக்காக நேற்று விசாரிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி அண்டனி கெல்லி, ஆஸி. அரசின் விசா இரத்து முடிவை இரத்து செய்தார். ஜோகோவிச்சை அரை மணி நேரத்துக்குள் தடுப்பு மையத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அவருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு உரிய பணத்தை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# அரையிறுதிக்கு தெரிவான களுத்துறை தெபுவன உதைபந்தாட்ட அணி

(என். ஜெயரட்னம்)

களுத்துறை வேர்ணன் பெர்னான்டோ விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற களுத்துறை உதைபந்தாட்ட லீக் நொக்கவுட் இரண்டாவது காலிறுதிப் போட்டியில் களுத்துறை, தெபுவன விளையாட்டு கழக உதைபந்தாட்ட அணி 3-2 என்ற கோல் வித்தியாசத்தில் களுத்துறை உதைபந்தாட்டக் கழக



அணியை வெற்றி கொண்டதன் மூலம் அடுத்த வார இறுதியில் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா இரண்டு கோல்களை பெற்று சம நிலையில் காணப்பட்டதால் பெனால்டி முறையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவன ஊழியர்களின் நல்லுறவை மேம்படுத்தும் வகையில் புட்டுபாகல வோல்டர் பெரேரா மைதானத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற மென்பந்து கிரிக்கட் சுற்றுத் தொடரில் 'லிபர்ட்டி ஸ்ட்ரைகர்ஸ்' அணி கிண்ணத்தை சுவீகரித்தது. இந்த தொடரில் 'தமிழன்' பத்திரிகையின் ஊழியர்கள் பங்குபற்றிய 'லிபர்ட்டி டஸ்கர்ஸ்' அணி இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தது.





























Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7